# திறவுகோல்

2053

சித்திரை

மாத இதழ்



வெளியீடு

மன்னையின் மைந்தர்கள் அமைப்பு

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகளை சரி செய்து கொண்டு வருகிறார்கள்.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு சேல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# காரல் மார்க்ஸ் - உலகத்தின் இரண்டாவது சூரியன்

கடந்த ஆயிரம் ஆண்டுகளில் வாழ்ந்த மகத்தான நூறு மனிதர்களில் முதல் நபர் காரல் மார்க்ஸ். பிரஷ்ய மண்ணில் பிறந்த காரல்மார்க்ஸ் பிறப்பால் ஒரு யூதர். தந்தை வழக்கறிஞருக்கு படித்திருந்தாலும் அன்றைய ஜெர்மானியர்கள் யூதர்களை வெறுத்ததால் அவருக்கு வழக்கோ வேறு உதவிகளோ சரிவரக் கிடைக்காமல் போனது. பிழைக்க வேறுவழியின்றி அவர்களுடைய குடும்பம் கிறித்தவ மதத்திற்கு மாறியது. காரல்மார்க்ஸ் தந்தை எதிர்பார்த்தது போலவே இப்போது அவர்களுக்கு உதவிகள் கிடைக்கத் தொடங்கின. காரல்மார்க்ஸ் ஒன்றும் சிறுவயதில் வயதுக்கு மேம்பட்ட சிந்தனை உடையவராக இல்லை. குடும்பச் சூழ்நிலையும், சமூக நெருக்குதல்களும் தான் ஒரு மனிதனை ஆகச்சிறந்தவனாக உருவாக்குகிறது. கேளிக்கை, மது, சூதாட்டம் என காரல்மார்க்ஸ் இளமைப் பருவம் கழிந்தது. காரல்மார்க்ஸ் வாழ்க்கையில் ஜென்னியின் பிரவேசம் அவருக்குள் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது. அப்போது உலகின் தலையெழுத்தையே மாற்றிக் காட்டிய மார்க்ஸின் கைகள் ஜென்னிக்கு காதல் கவிதைகள் எழுதிக் கொண்டிருந்தது. ஜென்னி அழகி, பிரபுக்களும், வியாபாரிகளும் அவளுக்கு வலை விரித்தனர். ஜென்னியோ தனது வாழ்க்கைத் துணை காரல்மார்க்ஸ் தான் என்ற முடிவில் உறுதியாக இருந்தாள்.

காரல்மார்க்ஸ்க்கு வாழ்க்கைத் துணையாக மட்டுமல்ல அறிவுத்துணையாகவும் ஜென்னி இருந்தாள். நீங்கள் இன்று காண்கின்ற காரல்மார்க்ஸை உருவாக்கிய சிற்பி ஜென்னி. அவளது வார்த்தைகள் ஒவ்வொன்றும் உளியால் அடிப்பதைப் போல இருந்தன. ஒருசிலசமயம் சிலையாவதற்கு இந்த அடிகள் தேவைப்படுகின்றன. மார்க்ஸின் பார்வை தத்துவத்தின் பக்கம் திரும்பிய போதுதான் அவருக்கு ஜெர்மானிய தத்துவமேதை ஹெகல் அறிமுகம் கிடைத்தது. ஹெகல் மாறிக் கொண்டே இருப்பதுதான் உலகம் என்றார். இது ஒத்துக்கொள்ளக் கூடியதுதான். ஆனால் முடியாட்சியில் மன்னர்கள் கடவுளின் பிரதிநிதிகள் அவர்கள் உத்தரவை மீறக்கூடாது. அரசர்களுக்கு அதிகாரம் கடவுளால் அளிக்கப்பட்டது அவர்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவர்கள் என்ற கருத்தினை மார்க்ஸால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. மாற்றம் தான் நிலையானது என்றால் மன்னனும் மாறித்தானே ஆகவேண்டும். அப்படியென்றால் மாற்றம் எங்கிருந்து தொடங்குகிறது இந்த சிந்தனைப் பொறிதான் காரல்மார்க்ஸை தத்துவ வெறிபிடிக்க வைத்தது.

கடவுளுக்கான தேவை என்ன? கஷ்டங்களுக்கு தீர்வை ஆராயாமல் கண்ணுக்குத் தெரியாத கடவுளையா நம்பிக் கொண்டிருப்பது. மனிதகுல வரலாற்றை புரட்டிப் பார்த்தோமானால் எப்போது எந்த மனிதனுக்காக கடவுள் இறங்கி வந்தார் எனச் சொல்லப்பட்டிருக்கிறதா என தனது நாத்திகவாதத்தை ஆய்வாக பெர்லின்

பல்கலைக்கழகத்தில் சமர்ப்பித்து டாக்டர் பட்டம் பெற்றார். அன்றைய சமூகம் ஒரு அடிப்படையை அடித்தளமாகக் கொண்டு செயல்பட்டுக் கொண்டிருந்தது. மார்க்ஸ் அந்த அடிப்படையை மாற்ற முயன்று கொண்டிருந்தார். தொழிற்சாலைகள் தொழிலாளர்களை சுரண்டுகிறது என்றார். தொழிலாளர்வர்க்கம் சுரண்டலுக்கு எதிராகத் அணிதிரள நான் என்ன செய்ய வேண்டும் என யோசித்தார். பேனா முனை கத்தி முனையைவிட வலிமையானது என முடிவெடுத்து அவர் எழுத்தைத் தேர்ந்தெடுத்தார். தமது இலக்கு இதுதான் என முடிவுசெய்தார். பத்திரிகைகள் அவருக்கு சிவப்புக்கம்பளம் விரிக்கவில்லை. அவரது கட்டுரைகளுக்கும் போதிய வரவேற்பில்லை. முதலாளித்துவம் கண்ணெதிரே விருட்சமாக வளர்ந்து நின்று கொண்டிருக்க அதற்கு கீழே தன்னைப் போன்ற விதைகள் வளராது என முடிவெடுத்தார்.

வேலை, சம்பாத்தியம், திருமணம் என சமூக அந்தஸ்தை மேம்படுத்திக் கொள்ள தன்னைப் பீடித்திருக்கும் தரித்திரத்தை விரட்டியடிக்க பாரிஸுக்கு செல்வது என காரல்மார்க்ஸ் முடிவெடுத்தார். கற்பனைவாதிகளுக்கும், சிந்தனைவாதிகளுக்கும் பாரிஸ் ஒரு சுவர்க்கபுரி. பாரிஸ் அவருக்கு அடைக்கலம் அளித்தது. நண்பர்கள் பலர் பணஉதவி செய்ய முன்வந்தனர். இங்கே தான் மார்க்ஸின் அரசியலும் தத்துவமும் கலந்து புதிய சித்தாந்தம் உருப்பெற்றது. பாரிஸ் தந்த நம்பிக்கையால் காரல்மார்க்ஸ் ஜென்னியைக் கைப்பிடித்தார். ஐந்துபேர் மட்டும் பங்கு கொண்ட எளிய பதிவுத் திருமணம் அது. மாபெரும் மனிதருக்கு துணைசெய்யும் பாக்கியம் ஜென்னிக்கு கிடைத்தது. தேன்நிலவுக்கு சுவிட்சர்லாந்து சென்ற காரல்மார்க்ஸ் புத்தகங்களை தன்னோடு எடுத்துச் சென்றார். அவர்களது அறையில் ஜென்னி ஒரு மூலையிலும் மார்க்ஸ் ஒரு மூலையிலும் படித்துக் கொண்டிருப்பதைப் பார்த்த மற்ற ஜோடிகள் விநோதமாக அவர்களைப் பார்த்துச் செல்வார்கள்.

சுவிட்சர்லாந்திலிருந்து திரும்பிய மார்க்ஸ் தனது கருத்துக்களை மக்களிடம் கொண்டுபோய்ச் சேர்க்க பத்திரிகை ஆரம்பிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்கு வந்தார். அரசாங்கத்தின் தணிக்கை அமலில் இருந்த சூழ்நிலையில் மார்க்ஸ் தனக்கு கடிவாளம் போடப்பட்டிருப்பதைப் போல் உணர்ந்தார். தனது கருத்துச் சுதந்திரம் பறிக்கப்படுவதை பொறுத்துக் கொள்ள முடியாமல் அந்த பத்திரிகை ஆசிரியர் பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டார் மார்க்ஸ். அதோடு அந்த பத்திரிகையும் நின்று போனது. பாரிஸ் அரசாங்கம் மார்க்ஸை நாடு கடத்தியது. பிழைப்பிற்காக பெல்ஜியம் வந்தார். பாரிஸில் அவரைச் சந்தித்த முக்கியமான ஒரு நபர் பின்நாட்களில் மார்க்ஸின் ஆன்மாவாக இருந்தவரான ஏங்கெல்ஸ். மார்க்ஸ்ன் இறப்பு வரை இந்த உறவு நீடித்தது. மார்க்ஸின் குடும்ப அங்கத்தினர்களில் ஒருவரானார் ஏங்கெல்ஸ். மார்க்ஸின் மீது ஏங்கெல்ஸ் வைத்த நம்பிக்கை அபரிமிதமானது. அதலபாதாளத்தில் விழுந்து கொண்டிருந்தபோது கைக்கு அகப்பட்ட மரக்கிளை போன்றது அது. ஏங்கெல்ஸ் குடும்ப பாரத்தைச் தூக்கி சுமக்க மார்க்ஸ் மானுடத்தை உயர்த்தும்

சிந்தனையிலேயே தமது வாழ்நாளை செலவழித்துக் கொண்டிருந்தார். ஏங்கெல்ஸ் கடைசி வரை திருமணம் செய்து கொள்ளவில்லை.

ஏங்கெல்ஸின் விடாமுயற்சியால் பெல்ஜியம் நாட்டிலுள்ள சிறுபான்மையினரான தொழிலாளர்கள் மார்க்ஸின் எழுத்துக்களை வாசிக்க ஆரம்பித்தனர். தொழிலாளர் புரட்சிக்கு முதல்விதை அங்குதான் தூவப்பட்டது. கஷ்டங்களுக்கு உள்ளாகும்போது தான் மனிதனுக்கு கடவுள் தேவைப்படுகிறார். தன் பாரத்தை இறக்கி வைக்க அவனுக்கு ஒரு சுமைதாங்கி தேவைப்படுகிறான். அவனுக்கு ஏற்பட்ட தலைவலிக்கு மதம் வலிநிவாரணியாக செயல்படுகிறது. இந்த அளவுக்கே மனிதனுக்கு மதம் தேவைப்படுகிறது. கம்யூனிசம் ஒரு மதமா, ஒரு அமைப்பா அதன் கொள்கைகள் என்ன என்பதை விளக்குவதற்கு மார்க்ஸ் 24 பக்கமேயுள்ள கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கையை நூலாக வெளியிட்டார். பச்சை வண்ணமுள்ள அந்த புத்தகம் உலகில் பேசப்படும் 200 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. கடவுளை ஏற்றுக் கொண்டு ஆத்திகன் ஆனீர்கள்  என்றால் கடவுள் என்ற ஒருவர் உங்கள் உரிமைகளில் தலையிட உங்கள் படுக்கை அறைவரை தலைநீட்ட அனுமதிக்கின்றீர்கள் என்று அர்த்தம். உங்கள் தலையெழுத்தை மதம் தீர்மானிக்க ஒப்புதல் அளிக்கின்றீர்கள் என்று அர்த்தம்.

பெல்ஜிய அரசாங்கம் மார்க்ஸை குறிவைத்தது. எந்தவொரு அரசாங்கமும் தாங்கள் சொல்வதே வேதவாக்காக இருக்கவேண்டுமென கருதும். அதற்கு எதிராக கருத்து தெரிவிப்பவர்களை தேசவிரோதிகள் என முத்திரை குத்தும். பெல்ஜிய அரசாங்கம் கைது செய்யவா இல்லை நாட்டைவிட்டு வெளியேறுகிறீர்களா என நெருக்குதல் தந்தது. மார்க்ஸ் தனது இருப்பிடத்தை கொலோனுக்கு மாற்றினார். பிரஷ்யாவில் இருந்தபோது ஒருசமயம் காவல் அதிகாரி மார்க்ஸ் வீட்டு கதவைத்தட்டி நகரத்திலிருந்து வெளியேற இருபத்துநான்கு மணிநேரம் கெடு விதிக்கிறார். மார்க்ஸ் கைது செய்யப்படுவார் என எச்சரிக்கிறார். எங்கே போவது யாரிடம் உதவிக் கேட்பது என ஜென்னிக்கு தெரியவில்லை. வீடு திரும்பிய மார்க்ஸ் விஷயத்தை கேள்விப்படுகிறார் உடனே ஒரு முடிவுக்கு வருகிறார் இந்த தேசத்தின் பிரஜையாக இருப்பதால் தானே என்னை நாட்டைவிட்டு வெளியேறச் சொல்லுகிறார்கள் நான் பிரஷ்யாவின் குடியுரிமையை துறக்கிறேன் என்று கூறி தேசமற்ற மனிதராகிறார். அவருக்குப் பிறந்த ஏழு குழந்தைகளில் மூன்று பெண் பிள்ளைகள் மட்டுமே உயிர்பிழைக்கின்றன அதற்கு குடும்பத்தில் நிலவி வறுமையே பிரதான காரணம்.

இந்த மூவரையும் ஜென்னி தன் தாய் வீட்டிலிருந்து அழைத்து வந்த ஹெலன் டெமூத் என்ற செவிலித்தாயே வளர்த்தெடுக்கிறாள். இவள் மார்க்ஸின் குடும்பத்தில் ஒரு அங்கத்தினராக மார்க்ஸ் இறக்கும்வரை அவர் கூடவே இருக்கிறாள். மார்க்ஸ் தனது குழந்தைகளுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கக்கூட பணமில்லாதவராக இருந்தார். அந்த நகரத்தில் வசித்த எல்லா நபர்களிடமும் மார்க்ஸ் கடன் வாங்கி இருந்தார். ஒருவரையும் அவர் விட்டுவைக்கவில்லை. இறந்த மகனுக்கு சவப்பெட்டி வாங்கக் கூட காசில்லை அவரிடத்தில். மார்க்ஸ்ன் நிலைமை இதிலிருந்து உங்களுக்கு புரிந்திருக்கும். உலகுக்கு

பொதுவுடைமை தந்த அவரது குடும்பத்தில் வறுமை தான் கோரத்தாண்டவம் ஆடியது. இது இப்படியிருக்க ஏங்கெல்ஸ் மார்க்ஸை பிரிட்டனிலுள்ள மான்செஸ்டர் நகருக்கு அழைத்துச் சென்று தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை நேரடியாக கண்ணெதிரே காண்பிக்க எண்ணினார். இந்த நிகழ்வுதான் மூலதனம் என்று சொல்லக்கூடிய தாஸ்கேபிடலுக்கு வித்திட்டது என்று சொல்லலாம்.

மார்க்ஸ் லண்டன் புறப்பட்டார். லண்டன் நூலகமே அவரது அறிவாலயமானது. கிட்டதட்ட பதினைந்து ஆண்டுகள் படிப்பதற்கு செலவிட்ட பிறகே அவர் மூலதனம் என்ற நூலை எழுத ஆரம்பித்தார். பிரிட்டன் குறைந்த கூலிக்கு அகதிகளை வேலைக்கு அமர்த்தியது. பஞ்சம் பிழைக்க வந்தவர்களின் குழந்தைகளை பச்சிளம் பிஞ்சுகள் என்று பாராது அவர்களையும் வேலை வாங்கி குழந்தை தொழிலாளர் முறைக்கு வித்திட்டதே பிரிட்டனின் அரசாங்கமும், பிரபுக்களும், வியாபாரிகளும் தான். இந்த பாதிப்புதான் முதலாளிகள் எவ்வாறு தொழிலாளர்களின் உழைப்பை சுரண்டுகிறார்கள் என மார்க்ஸை யோசிக்க வைத்தது. வர்க்க பேதம் பற்றி மூலதனம் பேசியது. எப்போதும் அரசாங்கம் முதலாளிகள் பக்கமே நிற்பதை சுட்டிக் காட்டியது. குடும்பத்தின் அடிப்படைத் தேவைகளைக்கூட மேம்படுத்திக் கொள்ள முடியாத மார்க்ஸிடமிருந்து உலகப் பொருளாதாரத்தைப் பற்றி பேசும் மூலதனம் பிறந்தது. அக்காலகட்டத்தில்தான் முப்பத்துஎட்டு ஆண்டுகளாக மார்க்ஸ்ன் நிழலாக இருந்த ஜென்னி புற்றுநோயால் இறந்தாள். அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி மார்க்ஸ்க்கு காத்திருந்தது. துக்கத்தால் அவர் நடைபிணமானார். அவரது வாழ்நாளில் மூலதனத்தில் முதல் பகுதியை மட்டுமே அவர் கண்ணால் பார்க்க முடிந்தது. மற்ற நான்கு தொகுதிகளையும் மார்க்ஸ்ன் இறப்புக்கு பின்னரே ஏங்கெல்ஸ் கொண்டுவந்தார். 1883 மார்ச் 14அன்று மார்க்ஸ் தான் சிந்திப்பதை நிறுத்திக் கொண்டார். இலண்டனிலுள்ள அவரது நினைவிடத்தை இன்று ஒவ்வொரு நாளும் லட்சக்கணக்கானோர் பார்வையிடுகின்றனர். அவரது கல்லறை வாசகம் உலகிலுள்ள எல்லோருக்கும் அறைகூவல் விடுக்கிறது உலகத் தொழிலாளர்களே ஒன்று கூடுங்கள் என்று.



–
ப.மதியழகன்,
115, வள்ளலார் சாலை,
ஆர்.பி.சிவம் நகர்,
மன்னார்குடி - 614001.
திருவாரூர் மாவட்டம்.
அலைபேசி: 9597332952
பகிரி: 9384251845

# சொல்லில் உயர்வு தமிழ் சொல்லே!

அதை தொழுது படித்திடடி பாப்பா என்று உரைத்தவனடி நம் பாட்டன்...
முண்டாசு கட்டிய கவிமகனாம் நம் தமிழ்மகன் பிறப்பிலும் இறப்பிலும் இரு ஆங்கில தேதிகள் எழுந்து நின்று மரியாதை செய்ததடி! ஆம் டிசம்பர் 11 பிறப்பெடுத்தான் செப்டம்பர் 11 காலனோடு போர் கொண்டான்.
சாலையில் ஆடவன் முன் நடக்க அவனை கைப்பிடித்தவள் ஆம்புடையான் நிழலோடுதான் இணையாக செல்ல வேண்டும் என்ற கட்டுப்பாடு இருப்பினும் செல்லம்மாவின் கைப்பிடித்து இழுத்து தன் கக்கத்தோடு அணைத்து அக்ரகாரத்தையே வாய்பிளக்க வைத்தவனடி நம் பாட்டன்
அச்சமும் நாணமும் நாயிகளுக்குதான் ஏனடா அர்ப்ப மானிடா அதை என் பெண்டீரிடம் எதிர்பார்க்கிறாய் என்று கேட்டவனடி நம் பாட்டன்
காக்கையும் குருவியும் எங்கள் சாதி என்று கவிபாடியவன்!

அக்கினி குஞ்சொன்று கண்டேன் - அதை அங்கொரு காட்டிலொர் பொந்திடை வைத்தேன்!

வெந்து தணிந்தது காடு
தழல் வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ? என்ற அவனது வரிகள் காற்றையும் நின்று செவிமடிக்கும்படி கட்டளையிட்டன!

சமூகம் தாழ்த்தப்பட்டோர் என்று ஒதுக்கிவைத்தவர்களுக்கு பூணூல் அணிவித்து அழகு பார்த்தான்
அச்செய்கையால் அவதூறு பேச்சிக்கும் உள்ளானான்
பிராமணர்கள் அவனை பைத்தியகாரன் என்றனர்!

அந்த பைத்தியக்காரனைத்தான் நம் பிள்ளைகள் பையில் சுமக்கிறார்கள்.
தான் பெற்ற இரு பெண்பிள்ளைகள் தங்கம்மாளுக்கும் சகுந்தலாவிற்கும் கீழ் சாதி பையனைத்தான் மணம் முடிப்பேன் என்று செல்லம்மாவிடம் சண்டையிடுவானாம்...
உலகத்தையே வாய்ச்சொல்லால் வென்றவன் தோற்றதென்னவோ செல்லம்மாவிடம் மட்டுமே!

திருவனந்தபுரம் பூங்கா சென்றிருந்தனர் பாரதியும் செல்லம்மாளும்... அங்கிருந்த சிங்கத்தின் கூண்டை திறக்க சொல்லி காவலாளியிடம் சண்டையிட்டான் நம் பாட்டன்
செல்லம்மா இரத்தம் உறைந்துபோய் நின்றாள்!

கடவுளே... என்னை கைப்பிடித்தவனுக்குத்தான் நல்ல புத்தியை கொடுக்கவில்லை! அந்த சிங்கத்திற்காவது சற்று நேரத்திற்கு நல்ல புத்தியை கொடுத்துவிடு! என் ஆம்புடையான் ஒன்றும் ஆகாமல் திரும்பினால் போதும் என்று வேண்டினாள்...

கூண்டிற்குள் சென்ற நம் பாட்டன் சிங்கத்தின் பிடரியை தடவி நீ காட்டிற்குதான் ராசா நான் கவிக்கு ராசா! எங்கே வணக்கம் சொல் என்றானாம்.

உண்மையில் சிங்கம் மூன்று முறை கர்சித்ததாம் நம் சிங்கத்தை பார்த்து.
சிங்கத்திடம் உயிர் தப்பியவர் யானையிடம் பிடிப்பட்டாரடி... பார்த்தசாரதி கோவில் யானை தூக்கி எறிந்தது நம் தமிழை
யானைக்கு மதம் பிடித்திருக்கிறது அருகில் செல்லாதே என்று உரைத்தோம் உன் கணவன் செவிமடிக்கவில்லை கர்வம் பிடித்தவன் பைத்தியக்காரன் என்று வசைபாடினார்கள் செல்லம்மாவிடத்தில்...

என்ன செய்வது தமிழுக்கே உண்டான கர்வம் யார்சொல் கேட்பானவன்
அவன் எழுதுகோல் தலைகுனியும் போதெல்லாம் நம் தமிழ் தலைநிமிர்ந்தது!!!
முப்பத்தி எட்டு வருடம் ஒன்பது மாத காலம் மட்டுமே வாழ்ந்த நம் இளந்தமிழன் படைத்த கவிகள் பாடி முடிக்கவே நம் ஆயுள் போதாதடி
இறக்கும் திருவாயிலும் "காலா உன்னை சிறுபுள் போல் மதிக்கிறேன் இங்கே வாடா உன்னை சற்றே என் காலால் மிதிக்கிறேன்" என்று பாடியவனடி நம் பாட்டன்.

காலம் போற்றா நம் கவியை காலம் தாண்டி வாழ வைப்போம்!!!
நம் தலைமுறைக்கு தலைபாகை கட்டிய மீசைக்காரனாம் நம் பாட்டனை பதியவைப்போம்!!!

வாழ்க பாரதி! வாழ்க தமிழ்!!

–

மகாலெட்சுமி.

# போர் மேகங்கள்!

வழக்கம் போல
உயருகின்ற
பெட்ரோல் விலையில்
எந்த மாற்றமுமில்லை
பதற்றமுற்ற மாணவர்களுக்கெல்லாம்
இடம் கிடைக்கிறது
சிறப்பு விமானத்தில்
கந்தகநெடியை
சுவாசித்த நாசிகள்
இப்பொழுது
தாய்மண் வாசத்திற்கு
ஏங்கித் தவிக்கின்றன

மீண்டுமொருமுறை உலக
வரைபடத்தை
மாற்றியமைத்திடத் துடிக்கின்றன
ஆதிக்க சக்திகள்
அழுகுரல்கள் கேட்காவண்ணம்
அமைதியாக போர் புரிகின்றது
அராஜகப்படை
சரணாகதித் தத்துவத்தை
நோக்கி நகர்த்தப்படுகின்றன
வெடிகுண்டுகள்

நகரை விட்டும்
தந்தையை விட்டும் வெளியேறும்
மகளுக்கு தெரியாது
இதுவே தந்தையை
காணும் கடைசி கணங்களென...

பிணங்களின் மேலமர்ந்து
சமாதானப் பேச்சுவார்த்தைக்கு
அழைப்பு விடுக்கப்படுகிறது
தலைக்கு மேல் சீறிப்பாயும்
இராக்கெட்டுகளை
ஆச்சரியமாக பார்க்கிறான்
அப்பாவி சிறுவன்

பரபரப்பாக விற்பனையாகிறது
இறப்பு செய்திகள்
அவரவர் வேலையை
அவரவர் செய்கிறார்கள்

சமாதானப் புறாவின்
இறகுளெங்கும்
இறுகிக் கிடக்கின்றது
தோய்ந்த இரத்தம்

–
பா. சிவகுமார்



# வறுமைக்குத் தெரியாது அந்த நாட்கள்.

எரிந்து சாம்பலாகும் வனத்திலிருந்து
தப்பித்த பட்டாம்பூச்சியின் இறகுகளில்
மிச்சமுள்ளது தீயின் வண்ணம்.

மழைப்பொழிந்த விடியலைத்
தாயைப்போல் நேசித்து
இதயத்தால் தழுவுகிறான் விவசாயி.

அம்மாக்களோடு வாயாடும்
அத்தனை மகள்களும்
அப்பாக்களைக் கவர்ந்தவர்கள்.

பெயர்தெரியாத பூச்சிகளை
வரவேற்று
இரவுப்பறவைகளுக்கு விருந்தளிக்கும்
தெருவிளக்குகள்.

அதிகாரத்தின் உச்சியில் ஏறி
மொத்த வலிகளையும் உறுமுகிறது
அடிமையின் சிறுகோபம்

பட்டுப்போன மரமொன்றை
வசந்தத்திற்கு அழைத்துச்செல்லும்
கூட்டக் கிளிகள்.

உழைத்துக் கொண்டிருக்கிறான்
விளைந்து கொண்டிருக்கிறது
விலைமட்டும் எப்போதும் சரிவில்

தையல்காரியின் கால்வழியே
இரகசியமாய் வடிகிறது குருதி

வறுமைக்குத் தெரியாது
அந்தநாட்கள்.

எலியைத் தவறவிட்ட
பாம்பொன்றின் கோபத்தைத்
தவளையைத்தந்து சரிசெய்தல் எளிது.

காதற்றப் பாம்பின்முன்
மகுடிவாசிக்கும் வித்தையறியின்
வாழ்வது எளிது புவியில்.

பகலின் அவமான குளத்தில்
ஆறுதல் அல்லிகளைப் பூத்து
சமரசம் செய்யும் இரவு.

துவைக்க இயந்திரம் வாங்கினேன்
மனைவிக்குத் உடனடித்தேவை
உடலிளைக்க மற்றுமொரு இயந்திரம்

வெளிநாட்டுப் பறவைகளுக்கு
வழித்தடம் வகுத்தளித்த
வான்வழி நிபுணர் முகவரிவேண்டும்.

பொம்மைகளை நேசிக்கும்
குழந்தையை
எளிதில் நெருங்குவதில்லை
எவ்வித நோய் நொடியும்.

ஒருதுளி மேகம்
மழையாய் புவியில் விழுகையில்
உயிர்த்தெழுகிறது ஞாலம்

பொம்மைகளில்
பேதம் பார்க்கத் தெரியாத
அதிசயப் பிறவிகள் குழந்தைகள்

இரவின் சண்டையைத்
தவறாமல் மனைவி பாடுகிறாள்

அதிகாலை சுப்ரமாதம்

இறுதித்துளி வற்றும்வரை
அலைகளின் புன்னகையோடு
மகிழ்ந்து நகர்கிறது கால்வாய்கள்.

பல நூறு வண்ணங்கள்
நறுமணமும் வேவ்வேறு
மலர்களில் தேன்மட்டும் சமத்துவம்.

விடுமுறை நாட்களில்
சத்துணவின்றி வாடிடும்
அரசுப்பள்ளி காக்கைகள்.

## பிசாசின் நாங்கள்

ஏற்றுக்கொள்ள வாய்ப்பற்ற
ஆறாத் தவிப்புகளைப்
பேரிருளால் அச்சுறுத்தி
மஞ்சள் நிறத்தில் தழுவுகிறது
செக்கச்சிவந்த அந்தி
வண்ணங்களோடு பூரித்து நாமில்லை
கழுதையைப்போல் சுமந்து
அன்றாட நிராகரிப்பை ஏற்கப்பழகி
ஏதேனுமொன்றைத்
சகித்துப்போற்றும் இரகசியத்தை
ஏற்றிருக்கிறோம்
வெறிநாயின் பாய்ச்சலால்
காரணமற்றுத் துறத்தும் யாவற்றையும்
பூக்களால் வெடித்துக்
கண்ணீரோடே கமழ
பரம சகித்தலோடு
சிலுவையில்
அறையப்பட்டிருக்கிறோம்
வனத்திற்குள் சிரமத்துடன் பதுங்கி
சிங்கங்களின் பசிநிறைந்த வாயில்
கௌரமாய் இரையாகும்
பகட்டு வாழ்தலை
அறமென கொண்டாடி மகிழ்கிறோம்
தேர்ந்த திறமையின் பேராற்றலில்
கோபுரங்களை உயர்த்தியும்
கல்லறைகளைத் தோண்டியும்
வாழவும் சாகவும் செய்கிறோம்
பருந்துகள் தோண்டியுண்ணும்
அழுகிய மாமிசத்தில்
ஈக்களாகிப் புழுவாகிக்
காலம் கழித்தலை
பெருங்கடலின் மலிந்த
நாவாய்களாய் களித்து மிதக்கிறோம்
நிலவில்லை கனவில்லை
உறங்குவதாய் இரவை
நகர்த்துகிறோம்
நிழலில்லை மலரில்லை
மரங்களாய் பிறவி
கடத்துகிறோம்
கடலில் உதிரும் நட்சத்திரங்கள்
கரையில் உதிரும் சருகுகள்
பசிக்கப் பழகிய வயிறுகள்
வலிக்கப் பழகிய இதயங்கள்
நீங்கள் சற்றும் விரும்பிடா
பிசாசின் நாங்கள்!

## குடிகார அவன்

அண்ணனப் பாரன்
தவியா தவிக்கிறத
தடுமாறி நிக்கிறத
கண்ணத்திறக்கிறான்
களத்தண்ணி உடுறான்
முடிஞ்ச அளவுக்கு
எங்கெங்கயோ கூட்டிம்போய்
பார்த்திருக்குது புள்ள ....
மஞ்சக்காமாலை முத்திப்போயி
அப்படியே அமுக்கிடுச்சான் ...
கொஞ்சநஞ்சமா குடிச்சாத்தான
சாராயக்கடையே கெதின்னு

கெடந்தாக்கா
கொடலு வெந்துபோயி
கோலாறு ஆயிடுச்சி ....
மணக்குள விநாயகர்ல
சேர்த்ததுக்கு முடியாதுன்னு
கோரிமேட்டுல சேர்த்தாங்கலாம்
காலையில ஏழுமணிக்கு
ஜன்னியில நல்லா பேசிச்சான்
பதினோரு மணிக்கு
டப்புன்னு போயிடுச்சி ....
என் கல்யாணத்துக்கு
இதான் மோளம் அடிச்சிது
இன்னும் சத்தம்
காதை உட்டுப் போகல ....
எத்தன நாள் ஆனாலும்
என் ஊட்டுக்காரு
இதுகிட்டதான் முடிவெட்டுவாரு
நல்லா அழவா வெட்டிவுடும்....
திம்மாம் பையன்
சாவுற வயசா?
கூடார் கூட கூடி
கடைசியா பாதியிலே
போவணும்னு எழுதியிருக்கு
நல்ல எழுத்து நடுவுல இருக்க
கோண எழுத்துக் குறுக்கே வந்தா
யாரால தப்பிக்க முடியும்....
பொண்டாட்டிய பார்க்கலனாலும்
தங்கம் மாதிரியிருக்க
புள்ளங்களப் பார்த்தாச்சும்
திருந்தியிருக்கலாம் ...
கைக்காச போட்டுப்
புள்ளைங்கள கெடுக்குறதுக்கே
ஊருக்கு ஊரு
ஐஞ்சாறு சுத்துதுங்க
அதுங்குளுக்கு நாள் வரமாட்டுது
நல்லதுங்கல்லாம்
அற்ப ஆயுசலேயே போவுது ......

முடிவெட்டற காச
மொத்தமா எடுத்துக்குனு
வூட்டுக்கே வரமா
ஒருவாராமா குடிச்சாக்கா
கடவுளுக்கும் அடுக்காது .....
எப்படி அழுவுது பாரு
அந்த அம்மா
பெத்த வயிறு பத்திக்கினு எரியுது
எப்படியாச்சும் மவன
திருத்திடாம்லுன்னு
காப்பாத்திடம்லாம்னு
வேண்டாத சாமியில்ல
காட்டாத டாக்டரு இல்ல
படாது பாடு பட்டிச்சி .....
சங்கத்துல காசியெடுத்துக்
கடங்காரியானதுதான் மிச்சம்
கடைசியா ஆஸ்பத்திரியில காட்ட
முப்பதாயிரம் எடுத்திச்சாம்
அதோட கஷ்டத்தப் பார்த்தும்
மனசு மாத்திக்கிலப்பாரு இது..
யானைக்கு மதம்புடிச்சா
தன் தலையில
தானே மண்ணள்ளிக் கொட்டிக்குமாம்
கையில தொழில் இருந்தும்
பொழைக்கத் தெரியுமா
போய் சேர்ந்திடுச்சே ....
இனிமே இந்தப்
புள்ளிங்க கெதியென்ன ....
அந்தப் பொண்ணு
எங்கயிங்க இருக்கப்போவுது
அம்மாவூட்டுக்கே போயிடும்....
சாவுக்கு வந்தவங்க
ஏச்சையும் பேச்சையும்
எப்போதும்போல் இப்போதும்
கேட்காமல்
கண்ணாடிப் பெட்டிக்குள்
கால்நீட்டிப் படுத்திருந்தான்

குடிகார அவன்..

# இறுதியாய் மிச்சம்.

இருள்விழுங்கும்
தொடுவானஅந்தியை
வனம் எரிக்கும்
மிகைத்தீயின் ஆவலில்
விரைந்து சூழ்கிறது
உன் பிரிவின்
கூரிய ஆயுதம்...
பதுங்கு குழிகளைத் துறந்து
நிற்கதியாய்
வீதிகளில் தவித்திருக்கிறேன்
முன்னம் அருகிருந்து
வண்ணம் தீட்டிய சுவரில்
உடைந்த நட்சத்திரங்களும்
தூளான நிலவும்
வெடித்துச்சிதறிய
அருவருத்த மாமிச நானும்
இனியிறுதியாய் மிச்சம் !

--

பொன்.தெய்வா,
ஐவேலி,
விழுப்புரம் மாவட்டம்.







ஓவியம்:
N.S. சாய் ருத்ரா,
3ஆம் வகுப்பு.

# பட்டினபாலை காட்டும் பூம்புகாரின் நகரச் சிறப்பு

திறவுகோல் வாசகர்களுக்கு அன்பின் வணக்கங்கள். காவிரிப்பூம்பட்டினத்தை பற்றிய வரலாற்றுக் களஞ்சியம் எனும் சிறப்பித்துப் போற்றபபடும் பத்துப்பாட்டு நூலான பட்டினப்பாலை பற்றி ஒவ்வொரு வாரமும் அறிந்து வருகிறோம். இந்த வாரம் பட்டினபாலை காட்டும் பூம்புகாரின் நகரச் சிறப்பு அங்கே இருந்த செம்படவர் வாழ்வியலையும், தவப்பள்ளியை பற்றியும், புறஞ்சேரி பற்றியும் பார்க்கலாம்.

சென்ற வாரம் கரிகால் பெருவளத்தான் மாளிகையைப் பற்றி பார்த்தோம் கதவுகளில் புலி உருவம் செதுக்கும் வழக்கம் அப்போதே இருந்திருக்கிறது. இன்று கதவுகளில் தெய்வ உருவங்களையும் இன்னும் பிற வடிவங்களையும் செதுக்கும் வழக்கம் உள்ளதையும் பார்க்கலாம். இது நம் வாழ்வியலில் உள்ள ஒரு மரபு என்பதையும் புரிந்து கொள்ள முடிகின்றது

தர்மம் தான் அறவாழ்வு. அதனால் இந்த பிறவியில் மிகுந்த புகழ் உண்டு. இயற்கையோடு இயைந்த வாழ்வும், உழவும் தமிழர் வாழ்வில் இரண்டறக் கலந்திருக்கிறது என்பதை இதன் மூலம் நாம் அறிந்துகொள்ளலாம்.

உழவுக்கும், வண்டியில் பூட்டி ஓட்டுவதற்கும் பயன்படும் பல காளைகளை வைத்திருந்திருக்கிறார்கள் ஒவ்வொரு வீட்டிலும் குதிரைகளைப் பூட்டி ஓட்டும் தேர்களும் ஏராளமாக இருந்திருக்கின்றன அரண்மனையின் சுற்றுச்சுவரில் எங்கும் சிறந்த ஓவியங்கள் வரையப்பட்டிருக்கின்றன இந்த விடயங்களை எல்லாம் கடந்த வாரம் நாம் பார்த்தோம்.

இந்த வாரம் பூம்புகார் நகரத்தில் என்னென்ன இருந்தது என்று பட்டினப்பாலை படம் பிடித்துக் கட்டுவதை நாமும் சென்று தரிசிக்கலாம் வாருங்கள். புகார் நகரத்தில் ஒவ்வொரு வீட்டிலும் பல மாட்டு கொட்டில்கள் இருந்திருக்கின்றன. இதனை கீழ்கண்ட இரண்டு வரிகளில் உருத்திரங்கண்ணனார் குறிப்பிடுவதை காணலாம்

மாட்டுக்கொட்டில்கள்
தண் கேணி தகை முற்றத்துப்
பகட்டு எருத்தின் பல சாலை; (51-52)

காளை மாடுகளையும் பசுக்களையும் பெரும் செல்வமாக கருதினர் பண்டைய

தமிழ் மக்கள். பசு சத்துள்ள பாலை தந்து மக்களின் வாழ்வை காக்க துணை புரிந்த. காலை ஏரில் பூட்டி உழவு செய்வதற்கும், வண்டியில் பூட்டி ஓட்டவும் ஏறி சவாரி செய்யவும், வாணிகம் செய்வதற்கும், பண்டங்களை ஏற்றிக்கொண்டு செல்லவும் பயன்பட்டன. பண்டங்களை சுமந்து செல்லும் மாடுகளுக்கு பொதி மாடுகள் என்று பெயர். ஆகையால் காளை மாடுகளை மிகுந்த அன்புடனும் பரிவுடனும் வளர்த்து வந்திருக்கின்றனர் நம் முன்னோர்.

பெரிய எருதுகள் அதாவது காளைகள் கட்டப்பட்டிருக்கும் பல கொட்டில்கள் இருந்திருக்கின்றன. அந்த கொட்டில்கள் மிகுந்த அகலமான முற்றங்களை கொண்டிருந்தது. அம்முற்றங்களில் நல்ல தண்ணீர் உள்ள கிணறுகள் அமைத்திருக்கின்றனர் அதாவது தண் கேணிஎன்றால் குளிர்ந்த நீரையுடைய கிணறுகள் அமைந்திருக்கும் அகலமான வாசல்களை உடைய கொட்டில்களும் அமைக்கப்பட்டிருந்திருக்கின்றன.

மாடுகள் அருந்துவதற்கு நல்ல தண்ணீர் வேண்டும். அதற்காகவே மாடுகள் கட்டும் கொட்டில்களில் முற்றங்களில் நன்னீர் கிணறுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மாடுகள் ஆரோக்கியமாகவும் வளமோடும் இருப்பதற்கு நல்ல வெளிச்சமும், காற்றோட்டமும் நல்ல தண்ணீரும் வேண்டும். இவையெல்லாம் மிகுந்த கவனத்துடன் அமைக்கப்பட்டு இருந்திருக்கின்றன

அண்மையில் நெட்பிளிக்சு இன்று உலகமெங்கிலும் பார்க்கப்படும் இணையதளத்தில் "WHAT THE HEALTH" உணவு பற்றிய ஒரு ஆவணப் படத்தை பார்க்க நேர்கையில் தற்போது நாம் அருந்தும் பால் (அது பாலா என்பது சந்தேகம்தான்) எவ்வாறு பெறப்படுகிறது? அந்த பாலைக் கொடுக்கும் பசுக்கள் எவ்வாறு வளர்க்கப்படுகின்றன? எத்தனை கொடுமைப்படுத்தி மிகப் பெரிய கார்ப்பரேட் நிறுவனங்களால் தொழில் முறையில் வளர்க்கப்பட்டு அவற்றிலிருந்து எப்படி பால் கறந்து எடுக்கப்படுகிறது?

பாலில் உள்ள அரசியல் போன்ற பல்வேறு விடயங்களை அந்த சினிமா படம் பிடித்துக் காட்டியது. முடிவில் அவர்கள் பால் உடலுக்கு நல்லதுதான் ஆனால் தற்போது வளர்க்கப்படும் பசுக்களும் அதிலிருந்து பெறப்படும் பாலும் நல்லதல்ல என்பது மட்டுமல்ல, சர்க்கரை நோய்க்கு முழுமுதல் காரணமாக இருப்பதாகவும் புற்றுநோய்க்கும் மிகப்பெரிய ஒரு காரணியாகவும் அமைந்திருப்பதாகவும் அதில் விளக்கி இருந்தார்கள் அதற்கு முக்கிய காரணம் இப்படி ஆரோக்கியமான ஒரு கொட்டில்களையும் ஒரு சுகாதாரமான ஒரு நிலைகளில் வளர்க்கப்படாத பசுக்கள் தான் காரணம். இதை படித்த பிறகு எனக்கு அதோடு தொடர்புபடுத்தி பார்க்கத் தோன்றியது.

தமிழரின் வாழ்வியலில் அனைத்து உயிர்களின் மீதான கருணையும் அறமும் அன்பும் இவ்வரிகளின் மூலம் எம்மால் அறிந்து கொள்ள முடிகின்றது தமிழர்களின் வாழ்வியல் அனைத்து உயிர்களின் மீதான அன்பும் அறனும் கொண்டே கட்டமைக்கப்பட்டிருக்கிறது.

காவிரிப்பூம்பட்டினத்துத் தவப்பள்ளியும் வேள்விச்சாலையும்

பூம்புகார் பெருநகரில் தவப்பள்ளி வேள்விச்சாலைகளும் இருந்திருக்கின்றன. காவிரிப்பூம்பட்டினத்தில் சமணர்கள் மற்றும் புத்தர்களும் தவம் செய்யும் இடங்களும் இருந்திருக்கின்றன. வேத முறைப்படி யாகங்கள் செய்யும் முனிவர்களின் ஆசிரமங்கள் பலவும் இருந்திருக்கின்றன. இதனை 53 முதல் 58 வரையிலுள்ள ஆறு வரிகளில் காணலாம்.

தவப் பள்ளித் தாழ் காவின்
அவிர் சடை முனிவர் அங்கி வேட்கும்,
ஆவுதி நறும் புகை முனைஇ குயில் தம் (55)
மா இரும் பெடையோடு இரியல் போகிப்,
பூதம் காக்கும் புகல் அருங்கடி நகர்த்
தூதுணம் புறவொடு துச்சில் சேக்கும்; (53-58)

சமணர்களும் புத்தர்களும் தங்கியிருந்து தவம் செய்யும் இடங்கள் பல இருக்கின்றன அவர்கள் தங்கி தவம் புரியும் இடங்களுக்கு பள்ளிகள் என்று பெயர். அண்மையில் சுகிசிவம் அவர்களுடைய காணொளி ஒன்றில் கூட "பள்ளி" என்ற பெயர் வந்ததற்கான காரணத்தை விளக்கி இருந்தார். சமணத்துறவிகள் உண்டு உறங்கி தங்கியிருந்து தவம் செய்து,கற்பிக்கும் இடங்களை தான் பள்ளி என்று அழைப்பார்கள். அதனாலேயே இன்று நாம் கல்வி கற்கும் இடங்களைக் கூட பள்ளி என்று அழைப்பதற்கு இதுவே காரணம் என்பதையும் அவர் அதில் குறிப்பிட்டு இருந்தார்.பட்டினப்பாலையும் இதற்க்கு சான்று பகர்கின்றது.

இத்தகைய வேள்விச்சலையில் ஒளிவிடுகின்ற சடையை உடைய முனிவர்கள் நெருப்பிலே யாகம் செய்கின்ற பொழுது வேள்வி குண்டத்திலிருந்து எழும்பும் மேலே எழும்பும் வெண்மையான புகையை கண்டு புயலே வந்துவிட்டது என்று பயந்து அங்கே சோலைகளில் மரங்களில் தங்கியிருக்கும் குயில்கள் அஞ்சி ஆண் குயில்கள் தமது கூட்டமான பெண் குயில்களுடன் அந்த சோலையை விட்டு பறந்தோடி பூதங்கள் காத்துக் கொண்டிருப்பதனால் மற்றவர்கள் புகுவதற்கு முடியாத பாதுகாப்பு உள்ள கட்டிடத்தில் புகுந்து அங்கே தங்கியிருக்கின்ற

தூதுணம் புறாக்களுடன் சேர்ந்து ஒரு பக்கத்தில் வசித்தனவாம்.

விளையாட்டுக் களத்தில் மறவர்களின் மற்போரும் வாட்போரும்

முது மரத்த முரண் களரி,
வரி மணல் அகன் திட்டை,
இருங்கிளை இனன் ஒக்கல்
கருந்தொழில் கலி மாக்கள்,
கடல் இறவின் சூடு தின்றும்,
வயல் ஆமைப் புழுக்கு உண்டும்,
வறள் அடும்பின் மலர் மலைந்தும்,
புனல் ஆம்பல் பூச் சூடியும்,
நீல் நிற விசும்பின் வலன் ஏர்பு திரிதரு,
நாள்மீன் விராய கோள்மீன் போல,
மலர்தலை மன்றத்துப் பலருடன் குழீஇக்,
கையினும் கலத்தினும் மெய்யுறத் தீண்டிப்,
பெருஞ்சினத்தான் புறங்கொடாது,
இருஞ்செருவின் இகல் மொய்ம்பினோர்,
கல் எறியும் கவண் வெரீஇப்
புள் இரியும் புகர்ப் போந்தை; (59-74)


இளவரசி
இளங்கோவன்

பழைய மரங்களையுடைய போரிடும் களத்தில், மணல் வரிகளாக உள்ள மேடுகளில், பெரிய உறவினர் மற்றும் சுற்றத்தார் கூட்டத்துள், வலிமையான தொழிலையுடைய செருக்கான மறவர்கள், கடலில் உள்ள இறால் மீனின் தசையை சுட்டுத் தின்றும், வயலில் உள்ள ஆமையின் தசையை வேக வைத்து தின்றும், வறண்ட மணலில் உள்ள அடும்பின் மலர்களை அணிந்தும், நீரில் உள்ள வெள்ளை ஆம்பல் மலர்களைச் சூடியும், நீல நிறத்தை உடைய வானத்தில் வலது புறமாக எழுந்து திரியும் நாள் மீன்களுடன் கலந்த கோள் மீன்கள் போல, அகன்ற இடத்தையுடைய மன்றத்தில் பலரோடு கூடி, கையாலும் ஆயுதங்களாலும் உடலில் படுமாறு தீண்டி, பெருஞ்சினத்தால் ஒருவர்க்கு ஒருவர் புற முதுகு காட்டி ஓடாத பெரிய போர்க்களத்தில், பகைமை உடைய வலிமையானவர்களுடைய கற்களை வீசும் கவணுக்கு அஞ்சி, பறவைகள் அங்கிருந்து நீங்கி, புள்ளிகளையுடைய பனை மரங்களை அடையும்.

பூம்புகாரில் குப்பங்களில் வாழ்கின்ற செம்படவர்கள் வறுமை என்பதே என்னவென்று அறியாதவர்கள் கவலையே இல்லாதவர்கள் கள் உண்டு உடுத்து உள்ள களிப்புடன் ஓய்வு நேரங்களில் விளையாடிக் கொண்டிருப்பார்களa. அவர்கள்

குதூகலமாகவும் பொழுது போக்கும் குணம் உடையவர்கள். இதனை 59 முதல் 74 வரையிலுள்ள 16 வரிகளில் காணலாம்.

போர்க்களங்களை ஒட்டி பெரிய உறவினர் மற்றும் சுற்றத்தார் கூட்டத்துள், வலிமையான தொழிலையுடைய செருக்கான மறவர்களாகிய செம்படவர்கள் வாழும் குப்பங்கள் இருக்கின்றன. அந்த போர்க்களங்களில் நெடுநாள் பட்ட மரங்கள் இருக்கின்றன. அவர்கள் குடியிருக்கும் குப்பங்கள் நீரோடியதால் வரிவரியாக கருமணல் கொண்ட பெரிய தட்டுகளில் அமைந்திருக்கின்றன. அங்கு வசிக்கும் செம்படவர்களுக்கு ஏராளமான உறவினர்கள் உண்டு. சுற்றத்தினர்களும் ஏராளமாக உள்ளனர்.

அவர்கள் உண்டு உடுத்தி உள்ள களிப்புடன் இருப்பதால் சோம்பேறிகள் அல்ல பாடுபட்டு வேலை செய்யக்கூடிய பாட்டாளிகள். அவர்கள் கடலிலே பிடித்த மீனை சுட்டு தின்றும், வயலில் வாழும் ஆமையை வேக வைத்துத் தின்றும் மகிழ்ச்சி அடைகின்றனர். ஆமை என்பது தமிழரின் வாழ்வில் உணவாக இருந்தது என்பதும் பட்டினப்பாலையில் பதிவு செய்யப்பட்டிருப்பதை கவனிக்க.

வறண்ட நிலத்தில் தோன்றிய அடம்ப மலர் மாலையை தரித்துக் கொண்டும், நீரிலே மலர்ந்திருக்கும் அல்லி மலர்களையும் பறித்துச் சூடிக் கொண்டிருப்பவர்கள். அந்த இடங்களில் இவ்வாறு அவர்கள் பலர் ஒன்று கூடி இருக்கும் தோற்றம் வானத்திலே வலப்புறமாக தெரியும் நட்சத்திரங்களோடு கூடிய கிரகங்களைப் போல காணப்படுவதாக பட்டினபாலை தெரிவிக்கின்றது.

அவர்கள் கையோடு கை பிணைந்து ஆயுதம் கொண்டு தாக்கியும் உடம்போடு உடம்பு தழுவியும் மிகுந்த கோபத்துடன் ஒருவருக்கொருவர் சளைக்காமல் பெரிய சண்டை செய்து விளையாடுகின்றனர். என்ன விளையாட்டு என்று புரிகிறதா மல்யுத்தம். மல்யுத்த விளையாட்டு தமிழர் வாழ்வில் 2000 வருடங்களுக்கு முன்பே இருந்தது என்பது இதன் மூலம் அறியலாம். அவர்கள் அனைவரும் மிகுந்த பலசாலிகளாக இருந்தனர். அதனால் ஒருவரை ஒருவர் வெல்ல முடியவில்லை.

ஆகையால் விலகி நின்று கல்வீசி அடித்துக் கொள்கின்றனர் இந்த கல்வீச்சு அதாவது கல்லை கொண்டு உயர்ந்த பனைமரத்தின் மரத்தின் உச்சியைத் தொடுவது என்ற விளையாட்டு விளையாடும் பொழுது அந்த பசுமையான பனை மரங்களின் மேல் இருந்த பறவைகள் அஞ்சி பயந்து ஓடுகின்றன.

இவ்வாறு கல்லால் ஏற்பட்ட வடுக்களோடு நின்றனவாம் பனைமரங்கள்.

புறச்சேரி

பறழ்ப் பன்றி, பல் கோழி, 75
உறைக் கிணற்றுப் புறச்சேரி,
மேழகத் தகரொடு சிவல் விளையாட (75-77)

செம்படவர் குப்பைகளை தவிர பல சேரிகளும் இருந்திருக்கின்றன சேரி என்பது சேர்ந்து வாழும் இடம் பலர் ஒன்றாக சேர்ந்து வசிக்கும் இடத்திற்கு சேரி என்று வழங்கலாயிற்று.

திட்டச்சேரி, பெருஞ்சேரி, புதுச்சேரி, வேளச்சேரி என்ற பெயர்கள் இன்னும் தமிழ்நாட்டிலே பல உள்ளதைப் பார்க்கலாம். உ.வே. சா. மற்றும் பொ. வே. சோமசுந்தரனார் குறுந்தொகை உரைகளில் ‘சேரி’ என்ற சொல்லுக்கு ‘தெரு’ என்றே பொருள் உள்ளது. இக்காலத்தில் சேரி என்று கூறினால் அதில் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழும் இடம் என்று பொருள் கொள்ளும்படியாயிற்று.

மேலும் சேரி என்ற பெயர் எப்படி ஒரு குறிப்பிட்ட சாதியினர் வாழும் இடத்திற்கு பெயராக மாறிவிட்டது என்பதையும் அறிந்து கொள்ளலாம். நகருக்கு புறமாக மக்கள் ஒன்று சேர்ந்து வாழும் இடங்களை குறிக்கும் புறஞ்சேரி அல்லது புறச்சேரி என்ற சொற்களை சங்க நூல்கள் பலவற்றிலும் காணலாம்.

பட்டினப் பாலையிலும் புறச்சேரி என்ற சொல் வழங்கப்பட்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக பழங்குடி மக்கள் பலர் ஊருக்கு புறத்திலே ஒதுக்கப்பட்டு தனித்து வாழ்ந்து இருக்கின்றனர். இவர்கள் வாழும் இடங்களை பொதுவாக பறைச்சேரி தளச்சேரி என்று கூறிவருகின்றனர். ஊருக்கு புறங்களிலே இருக்கின்ற காரணத்தினால் முதலில் புறச்சேரி என்ற பெயர் வழங்கி இருக்க வேண்டும் இதன் பிறகு நாளடைவில் புறம் என்பது மாறி சேரி என்ற பெயரால் மட்டுமே இந்த இடங்கள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

புறச்சேரியின் சிறப்பை பட்டினபாலை 75 முதல் 77 அடிகள் வரை உள்ள இந்த மூன்று வரிகளில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. குட்டிகளுடன் பன்றிகள் பல திரிந்து கொண்டிருந்தன. கோழிகள் பல மேய்ந்து கொண்டிருக்கின்றன அங்கே பெரிய கிணறுகள் இல்லை சிறிய உறைகிணறுகள் தான் இருக்கின்றன அங்கே செம்மறி ஆட்டு கிடாய் களும், கௌதாரி பறவைகளும் விளையாடிக் கொண்டிருக்கின்றன.

உறை என்பது வட்டமாக தொட்டில் போல குயவனார் செய்யப்பட்டு சூளையில்

வைத்து சுட்டு எடுக்கப்பட்டது. மண்ணால் செய்யப்பட்ட இந்த உறைகளை அடியில் இருந்து மேல் மட்டம் வரையிலும் அடிக்கி கட்டப்பட்டிருக்கும் கிணறுகளுக்கு உறைகிணறுகள் என்று பெயர்.

உறைகிணறுகள் ஒவ்வொரு ஊர்களிலும் இன்றும் உண்டு. இன்றைக்கும் இத்தகைய உறைகிணறுகள் கட்டுபவர்கள் உண்டு. கல்லால் கிணறு கட்டுவதைவிட உறைகளை கொண்டு கட்டப்படும் இந்த கிணறு குறைந்த செலவே பிடிக்கும். ஏழைகள் குடிதண்ணீருக்காக உறைகிணறுகள் கட்டுவது வழக்கம். இன்னும் இந்த வழக்கமுண்டு இத்தகைய உறைகிணறுகள் சோழ நாட்டில் தான் அதிகம்.

சோழ நாட்டில் உள்ள பல்வேறு கிணறுகளும் கிணறுகளையும் அதன் கட்டமைப்புகளையும் பற்றிய ஒரு அபூர்வமான கட்டுரையை அண்மையில் சுகிசிவம் அவர்கள் வெளியிடும் ஒளிபரவட்டும் இதழில் கூட காணக்கூடியதாக இருந்தது. இன்று கிணறுகளை எல்லாம் மூடிவிட்டு ஆழ்துளைக் குழாய் அமைத்து பூமிக்கு அடியில் இருக்கும் நீரை உறிஞ்சி நிலத்தடி நீரின் அளவை குறைத்து மனிதன் மண்ணின் வளத்தையும் மனித இனத்தின் வயதையும் குறைத்து கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம்.

இயற்கையோடு இயைந்த வாழ்வு மனித இனத்தை காக்கக்கூடிய மாமருந்து என்பதும் இயற்கையோடு இயைந்த வாழ்வும் அதற்கு துணையாக நின்ற காளை, பசுக்கள், கோழிகள், பன்றிகள், பறவைகள் போன்ற உயிரினங்களுடன் உழைத்து உழவு செய்து நிறைய பொருளீட்டி பொருளாதார வளம் பெற்று பெருமையோடு வாழ்ந்த மக்களும் அவர்களுடைய கவலையற்ற வாழ்வையும் பொழுதுபோக்கும் பட்டினபாலை அருமையாக படம் பிடித்துக் காட்டுகின்றது.

இன்று சினிமா கனவோடு இருக்கும் பலருக்கும் பட்டினப்பாலை பல காட்சிகளையும் கதைகளையும் நிச்சயம் தரும். தமிழரின் வாழ்வியலை ஆவண படமாகவும், இன்று அது அவ்வாறு மாறி இருக்கிறது மற்றும் பிரதிபலிக்கிறது என்பதையும் படம்பிடித்தாலே உலக சிறப்படையலாம். தமிழர் வாழ்வியலையும், சங்க இலக்கிக்கியங்களையும் உலகுக்கு கட்டிய பெருமையும் அடையலாம்.

இதுவரை வாசித்த அனைவரது அன்பிற்கும், நேரத்திற்கும் நன்றி. அடுத்தவாரம் சந்திக்கலாம் .

--


இளவரசி இளங்கோவன்,
மொன்றியல் கனடா.

## ஏன் பிரிந்தாய்....!

உன்னை அன்று தான்
முதன் முதலில் பார்த்தேன்....!?
கவிதையின் இலக்கணமாய்..
வசீகர இராணியாய்...!
அன்பின் குடிலாய்...!
பார்வையின் நிலவாய்...!
நீ இருந்தாய்....!?
நான் அப்போதே -
என்னை தொலைத்தேன்...!
என் நினைவுகள் யாவும்..
உன்னை சுற்றியே திரிந்தது...!?
புதிதாய் ஒரு -
சாதனை படைப்போம்
என்று நினைத்த போதே...?
தேவதையாய் வந்த நீ..!
நடு வழியிலேயே பிரிந்தாய்...!
என் கனவுகள் தொலைந்தன ..!
என் கற்பனை வற்றியது...!
இருப்பினும் -
எழுதுகிறேன்....!
என் அன்பு நிலையானது...!?

– முனைவர். சா.சம்பத்,
மன்னார்குடி.






சாதனா பரந்தாமன்
விருதை.

# குறுங்கவிதைகள்

பிடிக்கவில்லையென
சொல்லிவிட்டு போ..!
எனக்கென்ன
கவிதைக்குத்தான்
நட்டம்!
எழுதப்படாமலே
கிடக்கப்போகிறது
உனக்குள் புதைந்து..!

—

கடவுள்
உதவியும் செய்வார்
உதவியும் கேட்பார்
பிச்சைக்காரர் வடிவில்!
பிச்சையிடுபவர்களுக்கு
புண்ணியம் சேர்க்க!

—

இறந்து போன
தாத்தாவோ பாட்டியோ
மாமாவோ அத்தையோ
என்றே கைகள் நீள்கிறது
கையேந்தும்
பிச்சைகாரர்களுக்காக..!

—

அவள்
எங்கு சென்றாலும்
தன் பிறை நகத்தை
கடித்து துப்பி விடுகிறாள்
வானத்தில் நிலவாக..!

—

அத்தனை பெரிய
கடலுக்கு கூட பயப்படாதவர்கள்
ஒரு துளி விசத்திற்கு
அஞ்சி நடுங்குகிறார்கள்!

—

அம்மாவுக்கும் அப்பாவுக்கும்
சண்டை
குறைந்தது அவர்களின்
கோபங்கள்
அதிகமானது மன அழுத்தம்
பிள்ளைகளுக்கு!

—

மிக மிக பிடித்தமான
பாடலொன்று ஒலிபரப்பாகிறது
மிக மிக வருத்தமான நேரத்தில்!
ரசிக்கவா... தவிர்க்கவா...!

—

சூடுபட்ட உடல்
குளிர்விக்க பட்டது கடலில்
தகனம்!

—

பழதான விதை!
முளைத்ததும் புதிதானது...
செடி!

–

மகிழை. சிவகார்த்தி

# வெல்ல முடியாதது ஒன்று உலகினில் உண்டோ!

கடக்க முடியாத வான் எல்லை ஏது?
நீந்த முடியாதப் பெருங்கடல் பரப்பு ஏது?

அடைய முடியாத சிகரம் ஒன்று
இங்குண்டோ?

சுழன்றடிக்கும் சூறாவளியிலும்
நெஞ்சுரத்துடன் தப்பிப் பிழைத்தவர்
உண்டு!

பெருக்கெடுக்கும் எரிமலைக்
குழம்புகளால் கருகி மடிந்த
காட்டிலும் துளிர்க்கும் மரங்கள்.
கொட்டித் தீர்க்கும் பெருமழையிலும்
உயிர்த்திருக்கும் சிற்றெறும்பு
ஆறுகள்.

பொசுக்கும் வெய்யிலில் வாடா
இளந்தளிர்.

வெல்ல முடியாத படையுண்டோ?
தீர்க்க முடியாத பகையுண்டோ?

பொங்கி வரும் மக்கள் வெள்ளம்
கொடுங்கோலுக்கா அஞ்சும்?
தர்மத்தின் வாழ்வுதனை சூதும்
சூழ்ச்சியும் இன்னும் எவ்வளவு
நாட்கள்தான் கவ்விக்
கொண்டிருக்கும்?!

மானுட நீதியை இன்னும் எத்தனைக்
காலம்தான் மநுநீதி தின்று
கொண்டிருக்கும்?

கடிகாரத்தின் காலடிப் பயணத்தில்
என்றேனும் ஒரு நாள் நிச்சயம்
மிதிபடும் அதிகாரத்தின் திமிர்?
விடியாத இரவென்று இங்கு
இல்லவேயில்லை.

அந்தோ ஆடி வருகுது பார்
நாட்டைச் சீரழித்த
நாட்டுமக்கள் வாழ்வைச் சாகடித்த
பொல்லா மதம் பிடித்த யானை!

அதோ ஆர்ப்பரித்துத் துள்ளி வருகுது
பார்!

வாழ வக்கற்றுப்போன அணையா
நெருப்புடன் அக்கினிக் குஞ்சுகளின்
படையணி.

வெறும் நான்கு மலைவிழுங்கிய
களவாணிகள்
நம் ஆதி நிலத்தையும்
அனைவருக்குமான
பொதுச் சொத்துக்களையும்
மலிவு விலைக்கு விற்பதும்
வாங்குவதும்
ஏய்ப்பதும் ஏப்பம் விடுவதுமாக
இருக்க...

பொய்யான போலியான
நாட்டுப்பற்றை
அவர்களின் நாசகார கும்பலொன்று
ஏவிவிடும் மலிவான

வெறுப்பரசியலின் கொடும்சுழலில்
அப்பாவிகள் உழல...

பிளவுகளில் விழும் எழவுகள்.
ராமர் ஆட்சியில் சிதையில் எரிவது
சீதை மட்டுமல்ல...

சாமானிய மக்களின் நல்வாழ்வும்
நம்பிக்கைகளும்தான்!
ஊதி ஊதி
ஊதி ஊதி
உப்பியிருப்பது உடைபடா
பாறையென்று நீங்கள் இன்னும்
எத்தனைக் காலம்
நம்பி நடுங்கிக் கொண்டிருப்பீர்கள்?
உறுதியாக உரத்துச் சொல்வேன்!

அதுவோ வர்ணம் பூசப்பட்ட வெற்று
பலூன் தான்!

அதற்கு குத்தூசி எதற்கு?
குண்டூசியே போதும்!
எழு.

வெல்ல முடியாததென்று உலகினில்
ஒன்று இல்லவேயில்லை தோழனே!

–

**அமுதாராம்**
மன்னார்குடி.

---

## சுபமாய் சுடரட்டும் சுபகிருதுவே!!!

தித்திக்கும் திங்களாய் பிறக்கும்
இச்சித்திரை
எத்திக்கும் நல் இன்பங்களை
அருளட்டுமே
முக்கனிப் பலப் பழவழைகள்
வெற்றிலை
பாக்குடன் முகக்கண்ணாடிக் கூடி
நாணயமாக
பணக்கட்டுகளாய் தங்கநகைகளென
இயன்றதைத் தட்டிலிட்டு
கணப்பொழுதும் நினைவிலிருக்கும்
லட்சுமிதேவி வாசம் செய்ய
கனிகாணுதலால் நனிக்காலைப்
பொழுது மலரட்டுமே!

அறுசுவைக் கூடிய அமிர்தங்களாய்
உணவுடன்
இனிப்புக் கசப்புப் பண்டங்களமைத்து
வாழ்வின்
கருத்தினைக் கூறும்
இவ்வனைத்தோடு நாளைத்துவக்குக!

புதியதாய் பிறக்கும் புத்தாண்டில்
மனதும்
மதியும் நடத்தும் நல்வழியில் நடந்து
வெற்றியை ஈட்டும் நற்பணிகளை
ஆற்றித்தீயன
அகற்றி இந்நல் நெறிமுறைகளைப்
பின்பற்றி
சுபகிருது வருடத்தை சுபமாக
துவங்குவோம்!!!

–

**இரா. ரம்யபாரதி**

# சித்திரை பெருவிழா...

வருடா வருடம் வந்து செல்கிறது
பலர் திறந்த கதவுகளில்
சந்தோசமும் இந்நாளும்......
வந்தவர் போனவரெல்லாம்
பார்த்து குதுகலிக்கும் வண்ணத்தில்
வடிவமைக்கப் பட்டிருந்தாள் அந்த
அம்மன்
யாருக்கு என்ன வேண்டுதலோ
எல்லாம் வரிசையாக அர்ச்சகரிடம்
பரிந்துரைக்கப்பட்ட நிலையில்
பத்து ருபாயும் நூறு ருபாயுமாய்
வைத்து சொல்லப்படுகிறது.
பலநூறு கிலோமீட்டரில்
இருந்து வந்தவரின் கோரிக்கைகள்
இடுப்பில் பிள்ளை வைத்து
இராட்டினம் பார்த்தவளுக்கு
பக்கத்தில் கையேந்தும்
பிள்ளையின் உருவம் தெரியவில்லை
அந்த திருவிழா பெருவெளியில்
கரகாட்டம் ஒருபக்கம்
ஒயிலாட்டம் மறுபக்கம்
சிலம்பாட்டம் ஆரவாரம்
அந்த தெய்வீக பொங்கலுக்காக
வறுமை ஆடிய ஆட்டத்தை
அந்த திருவிழா பொழுது
காணாதது வறுத்தம் தான்......
கூடியிருந்த திருவிழாவில்
தள்ளிவண்டி பலூன்காரணிடம்
நிரம்பி இருந்த்து
நல்லமனம் கொண்ட
காற்று நிரம்பிய பலூன்கள்....
பட்டைத்தீட்டிய கத்திகளில்
பளிரென தெரிகிறது இருப்பவரின்
பணமும் இல்லாதவனின் குணமும்......
இனிப்புகள் எல்லாம் விலைபோனால்
இனிதாகிவிடும் அவர்களின் அந்நாள்.
எங்கோ பிறந்தவன்
வேறெங்கோ வாக்கப்பட்டு
சென்றவள் என அனைவரும்
கூடும் நேரத்தில்
வந்து வளைந்து நிற்கிறது
போன வருட பலிக்குபலி
பாவங்கள்........
இத்தனையும்
நிறைந்து வழியும் திருவிழாவில்
எல்லாம் நல்லது என
நினைத்தவனிடம்
ஒளிரூட்டி அமைதி வழங்குகிறது
அருளுடன் சேர்ந்த அந்த சிறு தீப
ஒளி.........

# தாழ்ப்பாளின் ஓசை

தலை நிரம்பிய மல்லிகை
முகம் நிறைந்த புன்னகை
பெட்டி நிறைந்த உயவில்
பல கிலோமீட்டர்களை கடக்கிறது
இன்பங்களை வார்த்தைகளாய்
போகும் வழியெல்லாம்
சிந்திக் கொண்டே நகர்கின்றன
செல்லும் இடமெல்லாம்
வணக்கங்களும் வாழ்த்துகளும்
அதனூடே ஒட்டிக் கொள்கிறது
வந்தவர் போனவரெல்லாம்
எதிர்பார்க்கும் கணவன் மனைவியின்
இடையையும் தோளையும் நிரப்பிடும்
மழலை வேண்டலின்
குத்தல் வரிகளை
ஓயாமல் கேட்டுக்கொண்டேதான்
இருக்கிறது

இன்பமும் மன உளச்சலும்
ஒன்று சேர விடைபெறும்
மனம் குமுறும் தாழ்ப்பாளின் ஓசை...!

## கூண்டுக்கிளியின் சிறகு....

என்னை யாரெல்லாம்
பார்த்து நகர்கிறார்கள் என்பதை விட
என் அழகை பார்த்து நகர்பவர்
ஏராளம்...

எனது சிறகை விரிக்கும்
பொழுதெல்லாம் பறக்கும் ஆசையை
விட கம்பியின் நெருக்கம் என்னை
சிறகை விரிக்க விடாது தடுக்கிறது...

சுற்றி அமைந்த கம்பிகளின் சிறிய
நெருக்கத்தில் பெரியதாக
தெரிகிறது பறந்து சென்ற
காக்கையின் சந்தோசம்...

கூண்டோடு தூக்கிச் செல்லும் நீங்கள்
எங்கள் மனதோடு தேக்கிய இறகின்
ஆசைகள் எல்லாம் இடம்பெயர்வதை
என்றாவது நினைத்துள்ளீரா...

வாரமோருமுறை எனது சிறகை
கத்தரித்து விடும் மனிதா...
எங்கள் மனமே கத்தரித்து
துண்டிக்கப்பட்டு கிடப்பதை
ஒருநாளும் கண்டதுண்டா...

காக்கைகளே வண்ணத்தை தெளித்து
செல்லுங்கள் நீராக நனைத்து எம்மை
விரட்டிவிட நேரும்...

அந்த மரத்தின் மேல்
தினம் வந்து அமரும் குருவியே
எங்கள் வண்ணங்களை
எடுத்துக்கொள்...
உனது சுதந்திர சிறகை மட்டும்
எங்களுக்கு கொடுத்து விடு...

எங்கெங்கோ பறக்கும் பறவையின்
மத்தியில் எங்கள் படைப்பு மட்டும்
கண்ணில் கயிறு கட்டிய நிலையில்
பிறப்பிக்கப்பட்டது போலும்
எங்களின் அடைபட்ட
வண்ணச்சிறகுகள்...

## திரும்ப வைக்காதே

நான் எரிந்து கொண்டிருக்கும்
பொழுதே
நீ மேலும் மேலும் எரிக்க
முயல்கிறாய்
அமைதியால் குனியும்
எனது தீர தலை நிமிர நொடிகள்
போதும்......

நான் நெஞ்செரிய
ஆடை அறுந்து விழ
எனது முதுகில் எட்டி உதைத்து
உனது சிரம் நிமிர்ந்த்தாதா
நினைத்து மார்த்தட்டும் மூடா

நான் திரும்பி செல்வதும்
என் தலை குனிந்து நிற்பதும்
நிமிர்த்தால் அறுந்து விழும் உன்
தலை என்பதால் தான்....

மொத்த சக்தியை கூட்டி

நகரும் என்னை இன்னொருமுறை
திரும்ப செய்யாதே
திரும்பினால்
குருதியில் சொட்டும் தங்காது
நான்
தேடுவது தேவை மட்டுமே
உலகை அல்ல....

மீண்டும் மீண்டும்
திரும்ப வைக்காதே....



--
கவிஞர் சே. கார்கவி

---





# அன்று இரவு...

ரகசியமாக நாம் சந்தித்தபோது..

வானில் தோன்றிய அந்த நிலவை ரசிப்பதற்காக
உன் மடியில் தலை சாய்த்தேன்...

பிறகுதான் தெரிந்தது...

நான் தலை சாய்த்ததே
அந்த நிலவின் மடியில் தான் என்று...

நினைவுகள்…

–
C.M. சிவா,
வடுவூர்.

# தோ(ள்)ழன் சுமக்கும் அன்பு

பள்ளியிலிருந்து வரும்
போதே ஒரு கேள்வியை
ரெடி பண்ணிட்டு
வந்திருவான்.
இன்னைக்கு என்ன
கேட்கப் போறான்னு
தெரியலையே என
புலம்பிக் கொண்டு
மகனின் வரவை
எதிர்பார்த்துக்கொண்டிருந்த
அம்மாவிடம்
கேட்டே விட்டேன் தன்
கேள்வியை....
ஏன் அப்பாக்கள்
எல்லாம் தன்
பிள்ளைகளைத்
தோளிலும்
அம்மாக்கள் எல்லாம்
இடுப்பிலும்
சுமக்கின்றனர் என...
ஒரு நிமிடம் யோசித்து
சுதாரித்துக்கொண்ட
அம்மா தன் மகனைப்
பார்த்து....
நான் பார்க்கும் உலகை மட்டும்
நீ பார்த்தால் போதும்
எனக் கூறி
தன் குழந்தைகளை
அம்மாக்கள்
இடுப்பிலும்
தான் பார்க்காத
உலகத்தை
நீ பார்க்க வேண்டும்
என அப்பாக்கள்
தோளிலும்
சுமக்கின்றனர்
என்ற அம்மாவை
அது என்ன "பார்க்காத
உலகம்" என்ற
கேட்ட மகனிடம்
சிறுவயது முதல்
தனக்கு கிடைக்காத
அத்தனையும்
தன் பிள்ளைகளுக்கு
கிடைக்க வேண்டுமென
அதிகம் பேசாத
தன் ஆசைகளை
மனதில் புதைத்துக்
கொண்டு வாழும்
அப்பாக்கள் சொல்லாமல்
செயலில் காட்டுவது
தான் "தான் பார்க்காத
உலகம்" அதற்கு தான்
தோளில் சுமக்கின்றனர்
என்று தன்
அம்மா கூறிய
சிறுவயது நினைவுகளைக்
அசைப்போட்டுக்
கொண்டே
அலுவலத்திலிருந்து
வீடு திரும்பிய
குணா தன்
நான்கு வயது மகனை
தோளில் சுமந்துக்
கொண்டு
தன் மனைவியிடம்...
இந்த நாட்டில்
வாழ்ந்தது போதும்
நாம் நம் நாட்டிற்கே

சென்று விடலாம்
எந்த உலகையும்
காணாத என் அப்பாவை
நான் தோளில்
சுமக்கும் நிலை
வரவே கூடாது.
மாறாக அவரை
உள்ளங்கையில்
சுமக்க வேண்டுமென
கூறியவனிடம்
விமான டிக்கெட்
பதிவு செய்யும்படி
கூறினாள் புவனா.

முற்றும்.

--
மு. ஜெரோஷா,
திருப்பூர்.

---

# தொலைந்து போகிறேன்...

அலுவலக வேலைகளில்
மூழ்கும் போதெல்லாம்
உன் அலைப்பேசி அழைப்பு
ஆறுதல் தந்து தேற்றும்!

மனச்சோர்வின் போது
உனது வார்த்தைகளோ வலுவூட்டும்
கொஞ்சிப்பேசும் உனது
காந்தக்குரலோ ஆற்றுப்படுத்தும்!

இப்போதெல்லாம்
என் அலைப்பேசியில்
என்னை அழைப்பதில்லை
உன் பெயர்!

பேசிய வார்த்தைகளை சேகரித்த
நாட்கள் போய் - இனி
நீ பேசாத நாட்களெல்லாம்
என் ஆயுள் குறைப்பு நாட்களே!

பேசாத வார்த்தைகளுக்கே
வலிமை அதிகம் என்பதால்
என்னை மரணவாசலில் நிற்கவைத்து
மௌனத்தையே பரிசளிக்கிறாய்!

வழக்கம்போல்
அலுவலக வேலைகளில்
தொலைந்துப்போகிறேன்
உன்னை தொலைத்த நான்!

–
பெ. விஜயலட்சுமி,
காஞ்சிபுரம்.



# தள்ளாட்டம் (சிறுகதை)

இன்னும் மூன்று நாளில், விவாகரத்து தீர்ப்பு வந்துவிடும். அதன் பின் நிம்மதியாகிவிடலாம்.. என்ற எண்ணமே, அனுவுக்கு நிம்மதியை, தந்தது. எத்தனை வருட போராட்டம்.. தேடிப்போய், வலையில் விழுந்த மானாய்.. மீனாய்.. இத்தனை வருடமும் சிக்கி, வாழ்க்கை சின்னாபின்னமாய், போனதை நினைத்தால்.. இப்போதும் அவள் உடம்பு நடுங்குகிறது.

நெஞ்சில் எத்தனையெத்தனை, சூட்டு தடங்கள். வயிற்றின் பக்கமும், முதுகின் பக்கமும், அவன் வைத்த சிகரெட்டின், நெருப்பு பொத்தல்கள்.. ஆறிப்போய் கிடந்தாலும், அடையாளம் தெரிந்தாலும், மனத்தின் காயங்கள் ஆறவேயில்லை.

குடும்ப, மானத்திற்கு அஞ்சி அஞ்சி, எதையும், வெளியே சொல்லாமல் இருப்பதை, இந்த கொடியவன்.. எப்படியெல்லாம் பயன்படுத்தி, சித்ரவதை செய்தான். ஒரே ஒரு புகார்.. கொடுத்தாலும் போதும்.. அவனது அரசு வேலை, பறி போய் ரோட்டுக்கு வந்துவிடுவான். இருந்தாலும் அதன் பொருட்டே, அவள் புகாரளிக்கவில்லை.

குறைந்தபட்சம் நல்லவனாய், இருந்திருந்தால், அவனோடு ஒன்றிரண்டு நண்பர்களாவது, நல்லவர்களாய், இருந்திருக்கலாம்.. அப்படி ஒரு நண்பனையும், இந்த ஏழு வருடம், அவனோடு வாழ்ந்த வாழ்க்கையில், அவளுக்கு யாரையும் தெரியவில்லை. ஒரே ஒரு ஆள் மட்டும், வருவான். அதுவும் ஒவ்வொரு ஞாயிறும்.. இரவு ஏழுமணியானால், போதும்.. பாட்டிலோடும் அசைவ பார்சல்களோடும், வந்திறங்கி விடுவான்..

கல்யாணமான, ஒரு மாதத்தில் ஓர் ஞாயிறு.. படத்துக்கு போகலாமா? என்று.. இவள் ஆசையாய் கேட்டபோது, அவனும் விருப்பமாய், கிளம்பினான். கிளம்பி வீட்டை, பூட்டும் சமயம்.. அந்த நண்பனெனும், பெயரில் ஒரு பார்சலடங்கிய பையோடு, வந்தவன்...

"என்ன முத்து கிளம்பிட்டியா..? புல் பாட்டில் எடுத்து, வந்திருக்கேன்.. படத்துக்கா போற..?" அவன் சொன்னதும், பாட்டிலை கண்ட முத்து, பிஸ்கட்டை கண்ட நாய் போல, பல்லெல்லாம் தெரிய.. பூட்டிய கதவை திறந்து, உள்ளே போனான்..

"என்ன சிஸ்டர்.. சினிமா தானே.. எங்கே போய்ட போகுது..? நாளைக்கு பாத்துக்கலாம்.. நானும் கூட வரேன்.. இன்னிக்கு, உங்க வீட்டுக்காருக்கு புடிச்ச சரக்கு.. படத்துக்கு போய்ட்டா, கிடைக்குமா.." கோரமாக, சிரித்து சொன்னவனை, இழிவாய் பார்த்தாள் அனு.

'என்ன ஜென்மம் இவன்.. நண்பனின் மனைவியிடம், எப்படி பேச வேண்டும் என்ற, எண்ணம் சிறிதுமில்லாமல், கேடு கெட்டத்தனமாய்.. த்தூ' அவன் முகத்திலே, துப்ப வேண்டும் என்ற வெறி அவளுள் வந்தது.. இருப்பினும், புதிய பெண்ணாய், அவள் வாழ்வை துவங்கியிருந்த நேரம்.. அமைதி காத்தாள்.
*
திருமணம் ஆன நாலாம் நாளே, ஓரிரவு பத்து மணி போல, குடித்துவிட்டு தள்ளாடி, விழப்போன முத்துவை பார்த்து, அவன் தள்ளாட்டம், குடியினால் வந்ததென, அறியாதவள்.. 'என்னவோ ஏதோவெ'ன பதறி, அவனை பிடித்து தாங்கினாள். பிறகுதான், அவனின் மீதான நாற்றத்தை, அவள் புத்தி உணர்ந்தது. நொறுங்கி போனாள்.

'தன் கணவன் குடிப்பவன்' என்பதை, அவளால் நம்பவோ ஏற்கவோ, முடியவில்லை. ஆனால் அதுதான் உண்மை. மறுநாள் அம்மாவிடம், போனில் அழுதாள்.

"குடிப்பாரா'னு விசாரிக்கலையா அம்மா.. நேத்து அத்தனை குடிம்மா.. பெரிய குடிக்காரரா.. இருப்பார் போல.. நான் என்னம்மா செய்ய? பயம்மா இருக்குமா..?"

"விசாரிச்சோம்டி.. எப்பவாவது, சம்பள நாள் மட்டும், கொஞ்சமா குடிப்பாரெ'ன தரகர் சொன்னார்ம்மா.. அப்பாவும், அப்படித்தானே.. மாசம் ஒரு முறை குடிப்பார் தானே.. அதனாலதான்ம்மா.. உன் கிட்டயேயும் சொல்லலை. இப்பக்கூட, அவரை திருத்துற சக்தி.. உன் கிட்ட இருக்குமா.."

"போனை வைம்மா.. குடிக்கறவன் இனியும், அதிகமாதான் குடிப்பான்.. திருந்த மாட்டாங்க.. என் விதி இதுதான்'னா, இப்படியே போய் தொலையறேன்.. விடுங்க" அழுதபடி அம்மாவின், பதிலுக்கு காத்திராமல், போனை வைத்தாள்.
*
மகள் அழுததை, தாங்க முடியாத அம்மாவும் அப்பாவும், அந்த ஞாயிறு காலை பத்து மணிக்கு, வந்திருந்தார்கள். முத்து ஓடோடி கவனித்தான். ஆடு கோழி மீனெ'ன, அத்தனையும் வாங்கி வந்து, தன் மாமியாரையும் மாமனாரையும், உபசரித்தான். அனு கூட கொஞ்சம் ஆச்சர்யப்பட்டாள்.

'தன் கணவன் தன் பெற்றோர்களை, இப்படி கவனிக்கிறானே..
'நாம்தான் வீணாக, பயந்துட்டோமோ.. சரி.. யார்தான் இந்த காலத்துல, குடிக்கல.. ஏன், பெரியம்மா பொண்ணு, வீட்டுக்காரர் ரங்கன் மாமா கூட, தினம் தினம் குடிக்கிறார்.. ஆனா அக்கா ஒருநாளும், அவரோடு சண்டையிட்டோ, பெரியம்மாவோடு அழுதோ, பார்த்ததேயில்லையே..!! நானும்தான், ஒரு நா அக்காகிட்டே, கேட்டேனே.. அதுக்கு அவள் சொன்னாளே..

'அனு.. ஆம்பளைங்க குடிக்கறது எல்லாம், ஒரு விசியமா.. அதை உதாசினப்படுத்திட்டே போய்டனும்.. புத்திமதி சொன்னா, ஏறாது.. அதேசமயம் குடிக்காதவன்தான், புருசனா வேணும்னா.. எந்த பொண்ணுக்கும் இங்க, கல்யாணம் நடக்காது. ப்ராக்டிலா யோசி.. என்றாளே.. அவளால மட்டும், எப்படி இதை சாதாரணமா, ஏத்துக்க முடியறது.. ஒரு மனைவியா மாறியதும் இயல்பா, என்னால, இவரு குடிக்கறதை ஏத்துக்க முடியலையே..' என்று யோசித்தபடி அவள் அதை கொஞ்சம் மறந்திருந்தாள்.

மாலை அம்மாவும் அப்பாவும், கிளம்பும் போது.. அப்பாதான் பேசினார்..

"தோ பாருங்க.. உங்கள என் மகனாதான், நினைக்குறேன். நீங்க குடிச்சிட்டு வந்தீங்க'னு பொண்ணு பயந்துட்டா.. மாசம் ஒரு முறையோ, இரண்டு முறையோ, குடிப்பதை வீட்டுல, குடிங்களேன்.. வெளியே சாப்ட்டு வந்தா.. வண்டியில வரும்போது.. போலீஸ் தொல்லை.. விபத்து இந்த பயமெல்லாம், இருக்கேங்க.. கொஞ்சம் மாத்திக்க முயற்சி, பண்ணுங்களேன்.. உங்களுக்கு புத்திமதி சொல்றேன்'னு, தப்பா நினைக்காதீங்க" அவர் சொல்லி முடிக்கும் முன் கத்தினான் முத்து.

"என்னது போலீஸ் புடிக்குமா..? எனக்கு புத்திமதி சொல்றீங்களா..? ஏதோ பொண்ணு, கொடுத்தவராச்சேன்'னு, இருந்தா.. பல்லை புடிங்கி ஆழம் பாப்பீங்களா..? த பாருங்க.. புரோக்கர் ஆளுகிட்ட, நான் குடிப்பேன்னு சொல்லித்தான், கல்யாணம் கட்டினேன்.. அவன் சொல்லலை.. உங்ககிட்ட?"

"அய்யோ தம்பி.. அவரு புத்திமதிலா.. சொல்லலைப்பா.. பொண்ணு பயந்துட்டா அன்னிக்கு.. அதாம்பா கேட்டுட்டாரு.. நீங்க மனசுல வச்சுக்காதீங்க.." அம்மா பதறி சொன்னதை, அனுவும் கவனித்தாள்.
முத்து, அனு பக்கம் திரும்பினான்.

"என்னடி இப்பவே, கதை சொல்ல ஆரம்பிச்சுட்ட.. நான் குடிப்பவன் தான்.. இஷ்டம்னா இரு.. இல்லேனா இப்பவே உங்காத்தா வீட்டுக்கு, கிளம்பு.. " என்று சொல்லிவிட்டு..

"வந்தமா.. கறிசோறை சாப்ட்டமா'னு, போகனும்.. என் குடும்ப வெவகாரத்துள்ள.. நுழைஞ்சா, பொண்ணு வாழாவெட்டியாதான்.. இருக்கனும்.." சொல்லிவிட்டு, வண்டியை எடுத்துக் கொண்டு, குடிக்க போனான் முத்து.
*
பெற்றவர்கள் அவமானப்பட்டு, நிற்பதை கண்ட அனுவுக்கு, மனது தாங்கவில்லை. அவர்களை சமாதானபடுத்தி அனுப்பிவிட்டு, தன் விதியை நொந்தபடி, படுக்கையில்

சாய்ந்தாள்.. இரவு நிறைய, குடித்து வந்தவனை, அவள் கண்டுக்கொள்ளவில்லை.

மது உள்ளே போனதும், மனைவியை தேடும் ரகமான முத்து.. அவளிடம் நெருங்கி வந்த போது, அவள் அவனை உதறினாள்.

"ச்சீ என்கிட்ட வரும் போது, குடிச்சிட்டு வராதே.. நாத்தம் கொடலை புரட்டுது" தன் பெற்றோரை, அவமானபடுத்திய ஆத்திரம்.. அவளுக்குள் தகித்தாலும்.. மிருக வெறியும், பலமும் கொண்ட அந்த மிருகத்திடம், மானைப்போலே, சிக்கி அன்று சீரழிந்தாள். அதுவே தொடர்கதையானது நெடுங்கதையானது.

*

இந்த ஏழு வருடத்தில், அவள் மனமறிந்து ஆசையோடு, அவன் கூடுவதில்லை. அவளுக்கென்ற எந்த ஆசையும், அவள் மனதிலும் உடம்பிலும், செத்து நிறைய, ஆண்டுகளாகிவிட்டது. உடம்பை சுட ஆரம்பித்த போதுதான், அவனொரு சைக்கோ என, அறிந்தாள்.. யாரிடமும், சொல்ல முடியாத வேதனை அது.. அந்த சுட்டெரிக்கும் நெருப்பை, கூட, அவள் உடம்பு ஏற்றது. ஆனால் தன்னை நம்பி, வாழ்க்கையை ஒப்படைத்த ஒரு பெண்ணின், மனமறியாத மிருகத்திடம், இனியும் வாழ வேண்டுமா..? என்ற முடிவோடு அவள் தீர்மானித்துதான்.. இது.

விவாகரத்து வழக்கு தொடுத்தாள். தனக்கென, பிறந்த பெண் குழந்தைக்காவது, நல்ல வாழ்வை தரனும் என்றால், இவனை விட்டு ஒதுங்குவதே.. நல்லது என நினைத்தாள். ஆறு வயது அந்த குழந்தை.. ஒருநாள் முத்து இல்லாத போது, கேட்டாள்.

"ஏம்மா அப்பா சிகரெட்டுல, சுடறாரு.. உன்னை அடிக்கிறாரு.. வேணாம்மா இந்த அப்பா.. எனக்கு பயம்மா இருக்குமா.. உனக்கு சுடலியா" குழந்தை, வருத்தமாய் கேட்டபோது,

"என் கண்ணே.." என அழுது, வாரி அணைத்துக் கொண்டாள். அன்றுதான் அந்த முடிவை எடுத்து, விவகாரத்துக்கு கோர்ட்டை அணுகினாள், அனு.. இதோ மூன்று நாளில் தீர்ப்பு.. வக்கிலம்மா சொன்னார்கள்..

"அனு.. இனிமேயாவது, நல்ல வாழ்க்கை அமைச்சுக்கோ.. உன் கஷ்ட காலம் போகட்டும்.. தீர்ப்பு நல்லதாவே, வரும். கொழந்தை உன் கூட இருக்கத்தான்.. தீர்ப்பாவும்.. அவரோட ஜீவனாம்சம் கேக்கலாம்'னு, சொன்னா நீதான் கேக்கல.. வேணாம்'னுட்ட.. குழந்தைக்காவது வாங்கி இருக்கலாம்"
என்றாள்.

"இல்லம்மா.. அந்தாளே வேணாம்னு.. சொல்றேன்.. அந்த காசு எனக்கு எதுக்கு..?

நான் பாத்துக்குறேன்ம்மா.. என் குழந்தையை" வைராக்கியத்தோடு சொன்னாள்.
*
தீர்ப்புக்கு முதல் நாள். முத்து அவளை தேடி, வந்து நின்றான். அம்மாதான் வரவேற்றாள்.

"உள்ள வாங்க உட்காருங்க.." அவன் வந்து உட்கார்ந்தான்.. கூடத்தில் உட்கார்ந்திருந்த, அவன் குழ்ந்தை முல்லை.. இவனை பார்த்ததும், உள்ளே ஓடிப்போனாள்.

"அம்மா அப்பா வந்திருக்காரு.. நாம போவனுமா..? வேணாமா.. நா வர மாட்டேன்" கலங்கி போய், அனு எதிரே நின்றாள், குழந்தை முல்லை.

"இல்லடி கண்ணு.. நாம போவ வேணாம்.. நீ பயப்படாதே.. நான் இருக்கேன்.." குழந்தையை, அணைத்துக் கொண்டாள். தன் அம்மாவின் அணைப்பில் முல்லை பயத்தை உதறினாள். அனு அம்மா, உள்ளே வந்தாள்.

"அனு அவரு திருந்தியிருப்பார்'னு, நினைக்கிறேன் அனு.. தாடியும் அழுக்குமா.. அந்தாளு நிக்கறத பார்த்தா எனக்கே.. பாவமா இருக்குடி.. ஒரு முறை இறங்கி வாயேன்.. நாளைக்கு, கோர்ட்டுல சேர்ந்து வாழறோம்'னு, மனு கொடுத்தா போதுமாம்.. சொல்லுடி.. பாவமா இருக்குடி.. இந்த ஆறுமாசமா, அவரு குடிக்கலையாம். சிகரெட் கூட விட்டுட்டாராம்..கொஞ்சம் மனசை வைய்யுடி.. என் பொண்ணு.. வாழவெட்டி'னு, போரோட வாழறது சரியா..?" பெற்றவளின் வயிறு, பற்றி எரிந்தது. தன் ஒரே மகளின், வாழ்க்கை கேள்வி குறியாய் போகுமோ? என்ற அச்சம், அவளை வாட்டியெடுத்தது.. அனு சொன்னாள்.

"அம்மா அவரோடு, வாழறத விட, வாழா வெட்டியா வாழ்ந்துட்டு, போறது எனக்கு கஷ்டமில்லைம்மா.. நாலு பேரு.. ஏதோ சொல்லுவாங்க'னு, நான் அவரோட வாழ தயாராயில்லை. என் பொண்ணே அவரை, வேணாம்'னுட்டா.. அந்த பிஞ்சுவோட, மனசுல கூட அவரு வேணாம்'னு தோணுதே.. என்னை 'கம்பள்' பண்ணாதே ப்ளீஸ்" என்றாள்.
பெண் வெறுத்தால், வெறுத்ததுதான்.. அது ஏனோ, ஆண்களுக்கு கடைசிவரை, புரிவதேயில்லை.

முல்லை, தன் அம்மாவின் கன்னத்தில், எச்சில் பட ஒரு முத்தம் வைத்தாள். நாளை.. நல்ல பொழுதாய் விடியும்.. என்ற, நம்பிக்கை அனுவின் மனதில், மகிழ்ச்சியை தந்தது. படித்த படிப்பு, கையில் இருக்கு.. அது தன் வாழ்க்கைக்கு பயன்படும்.. என்பது அவளுக்கு தெரிந்த ஒன்றுதான்.

அம்மா கூடத்துக்கு, வந்தாள். அங்கே முத்துவை காணலை. வாசல் வந்து வெளியே, பார்த்தாள். அவன் சோர்வாய், நடந்துக்கொண்டிருந்தான். அந்த நடையில், தள்ளாட்டம் இருந்தது. ஆனால் அவன் குடித்திருக்கவில்லை.



–
இரவிச்சந்திரன்,
அலைபேசி மற்றும் பகிரி: *90801 02178*

---

# அரசியல் பேசுவோம்...

காலை நேரம்
சாலை ஓரம்
கையில் வடிநீர் கோப்பையுடன்
நாளிதழ் சகிதமாய்
கார சாரமாக
நாட்டு நடபுடன்
நாங்கள் அரசியல் பேசுவோம்...

அரசியல் அறிவியல் என்பதை
அறியாமல் ..
சமுதாய கூட்டு வாழ்வியல்
என்பது புரியாமல்
நாங்கள் அரசியல் பேசுவோம்...

சமுதாய கட்டமைப்பின் தூண்
என்பதை அறியாமல் ...
சாதி, மதங்களால் பிளவு கொண்டு
கொடிக்கு ஒரு கொள்கை..
அணிக்கு ஒரு நீதி என்று
நாங்கள் அரசியல் பேசுவோம்...

பிறப்பால் அனைவரும் சமம்
என்பதை
மறந்து..
பாசிச கண்கள் கொண்டு
நான் ஆரியன்
நீ தமிழன்
என்று நாங்கள் அரசியல்
பேசுவோம்...

நிலம் நீர் காற்று அனைவருக்கும்
சமம் என்பதை அறிந்தும்
நீ உழைக்க பிறந்தவன்
நான் உன்னை ஆள பிறந்தவன்
என்று நாங்கள் அரசியல்
பேசுவோம்...

இல்லாத கடவுளுக்கு சிலை வைத்து
சிலாகித்து...
அவரை வணங்க நீ தகுதியற்றவன்
தீட்டு பட்டவன் என்று நம் மண்ணில்
வந்தேறிகள் நம்மை புறம் தள்ள...
கொள்கை பிடிப்போடு???
நாங்கள் அரசியல் பேசுவோம்...

சமுதாய சமன்பாடு என்னும்
நிலையை
முன்னிறுத்தாமல்.. முனைப்புகள்
காட்டாமல்...
அர்த்தமற்ற கொள்கைகளில்
சுய ஆதாயம் கொண்டு
சுய வளர்ச்சி கொள்ள

அர்த்தமற்ற நிலையற்றதன்மைக்காக...
அரசியல்வாதிகள் செய்யும்
செயல்கள்
அறிந்தும்
நாங்கள் அரசியல் பேசுவோம்...

சமுதாய கட்டமைப்பு
சமுதாய வளர்ச்சி
சமூக முன்னேற்றம்
சமூக கொள்கை மூலம்
சமூக ஒற்றுமை.
மேவிய யாவும் நல்லாட்சி
தத்துவங்கள் என்பதை மறந்து
சூழ்நிலைகள் சுயம்மாக பின்னும்
அரசியல் வலைகளை அறியாமல்
புரியாமல் நாங்கள் அரசியல்
பேசுவோம்

நிதமும்
காலை நேரம்
சாலை ஓரம்
வடிநீர் கோப்பையுடன்
நாளிதழ் சகிதமாய்
அரசியல் பேசுவோம்....

--

கவிபாரதி. சதிஷ்,
விருதை.



---

# குறுங்கவிதைகள்

*1*
அலைகளில் முகம் கழுவும்
வான் மேகங்கள் ....!!!

உழுத நிலத்தில் வெண் நாரைகள்
இறையானது புழுக்கள் ...!!!

நட்சத்திரம் போல் காட்சி தருகிறது
தூரத்து மின் வெளிச்சம் ...!!

அந்தி சாயும் பொழுது அரிதாரம்
பூசிக்கொள்கின்றன சிவந்த வானம்
...!!

2.
அடர்ந்த கானகம்
ஒளி சிந்தும் நிலவு
இருளில் வண்ணத்துப்பூச்சிகள்
.....!!!!

*3*
உனக்கான காத்திருப்புகளில்
புத்தனாகி போனேன்
எனக்கு பின்னால் ஏதோ ஒரு மரம்
...!!!

--

ச. இராஜ்குமார்,
திருப்பத்தூர் மாவட்டம்.

## துளிப்பாக்கள்

கரையும் காகம்
அன்னமிடுகிறாள்
விருந்தாளி வருகை

பாழடைந்த மண்டபம்
தத்தி தத்திச்செல்கிறது
உதிர்ந்த சருகுகள்

கனவை சுமந்து செல்கிறது
நெடுதூரமாய்
சாலையில் மிதக்கும் ஊர்தி

வயிற்றுவலியில் துடிக்கிறாள்
உதிரம் சிந்துகிறது
பூப்பெய்திய மகள்

ஒற்றை இலையில்
இரு உயிர்கள்
காதல் பயிலும் குருவிகள்

நூறாண்டு மரம்
உயிர் விடுகிறது
வாழும் விறகுவெட்டி

செங்கல் சூளையில்
எரியும் உயிர்கள்
குழந்தை தொழிலாளி

நெடுநாளாய் காத்திருக்கிறது
பயணிக்காத கிளைகள்
நிழற்குடைமீது மரக்கிளை

ஆற்றில் வெள்ளம்
மிதக்கிறது
விவசாயியின் குடும்பம்.

தேணுண்ண வந்தவண்டுகள்
முகத்தில் கவலை
உதிரும் பூக்கள்

சரக்கு வண்டி
சாலையில் கவிழ்ந்தது
போதை ஆசாமி

## சிரிப்பு

இதழ்களின்
மீதமர்ந்து ஒளிர்கிறாய்
இதழின் கதவுகள்
உடைபட்டு உருள்கிறது
இதயவாசலில் மிளிர்கிறது

முகங்களை அழகாக்கினாய்
உடலை பொலிவாக்கினாய்
கனவை நிசமாக்கினாய்
ஆனந்த பூங்காற்றாய்
தாலாட்டுகிறாய்

என் இதழ்கள்
விரிகின்றபோது
விழிகள் சுரக்கின்றன
ஆனந்த கண்ணீரை...

உன்இதழ்கள்
விரிகின்றபோது
என்இதழ்கள்மட்டும்
கவனிக்கின்றன
அழகான உன்இதழ்கள்
உதிர்க்கும் புன்சிரிப்பை..
உன் இதழ்மயக்கும் சிரிப்பில்
உறைந்து போகிறேன்
எனை தட்டி எழுப்பாதே

ஆயிரம் யுகங்களில்
பதிவு செய்கிறேன்
உன் இதழ் புரியும் சிரிப்பை...

இதழ்களால்உன்சிரிப்பை
புதைக்கும்போதெல்லாம்
இதயம் கேட்கிறதே
உதயமாகுமா உன் சிரிப்பு?

சிரிப்பாய் சிரித்துவிட்டு
சரித்துவிடுகிறாய்
இனிப்பாய் இனிக்கிறாய்
இதழ்கள் பேசுகையில்..

உனது காலடியில்
வீழ்ந்து கிடக்கிறது
மௌனத்தில் ஆழ்கிறது
புதைந்த புன்னகை

இதழ் விரித்து நகைத்திடு
இனிதாய் காலம் நகர்த்திடு
பிணிகளைஅறவே தவிர்த்திடு
புதுயுகம் வாழ்வில் சமைத்திடு

## வெயில்

விண்ணிலிருந்து
ஏவப்பட்ட சூரியக்கதிர்கள்
ஊரெங்கும் உலவுகிறது

அடர்விழும் காட்டில்
தன்கதிர்களை நிரப்ப
இடம் தேடுகிறது

பொங்கியெழும்
கடலலை மீதமர்ந்து
நீச்சல் பயிற்சி எடுக்கிறது

மலை உச்சியில் அமர்ந்து
அதள பாதாளத்தை
எட்டிப் பார்க்கிறது

பொத்தல் விழுந்த
கூரைவீட்டிற்குள்
சாகவாசகமாய் அமர்ந்து
அனல் மூட்டுகிறது

மனித உயிர்களின்
மேனியில் விழுந்து
வியர்வைத்துளிகளாய்
உருண்டோடுகிறது

இறைத்த
வியர்வைத் துளிகளை
வாரி இறைக்குமுன்
மீண்டும் மீண்டும்
அனல் மூட்டுகிறாய்
தன் கதிர்களை
தெளித்தவாறு....

ஆகாயத்தில்
விரவிக்கிடந்த நீ
அக்னி நட்சத்திரமாய்
பிரகடனம் செய்கிறாய்

மேல் சட்டையின்றி
விண்ணைப்பார்த்து
கையசைத்து
சிரிக்கும்குழந்தை
தன்நிழலைப் பார்த்து
விர்ரென்று
அழத்தொடங்குகிறது

உறங்கும் இரவில்

உறங்கிவிட்டு
விழிக்கும் பகலில்
கொள்ளென்று சிரித்து
சுள்ளென்று
சுட்டெரிக்கிறாய்

## இரவு

விரட்டியடிக்கப்பட்ட
பகற்பொழுது
மெல்லவே கசிந்து
ஓடி ஒளிகிறது
மலைமுகட்டின் பின்னால்...

கருஞ்சாந்து பூசி
அந்தரத்தில் ஆடுகிறது
உண்மைகள் உறைந்துகிடக்க
பொய்கள் கரைசேர்கிறது

மெல்லிய ஒலிகள்
இருளை கிழித்து
அரங்கேறுகிறது
எங்கிருந்தோ அழைக்கும்
காட்டுக்குயிலைப்போல்..

நிலவை கிரீடமாய் சூடிய
உனக்கு வழிகாட்டுகிறது
இருளைக் கடந்து
செல்வதற்கு...

இருள்மேக கூட்டிற்குள்
நட்சத்திர கூட்டங்கள்
கூடுகட்டி வாழ்கிறது

இருளில் யாசிக்கும்
மெல்லிய காற்று
வழிதேடி அலைகிறது

அன்பின் பரிணாம ஊற்றில்
தாகங்களை தணித்து கொள்ள

எங்கும் வியாபித்திருக்கும்
அடர் இருளுக்குள்
அயர்ந்து கிடக்கிறது
நாளெல்லாம் உழைக்கும்
சுமைதூக்கும் தொழிலாளி

தாலாட்டும் கைகளில்
தவழ்ந்து கிடக்கிறது
ஆடும் தொட்டிலுக்குள்
அயராத மழலை

நீ மட்டுமே
விழித்துக்கொண்டு
இருக்கிறாய்
இரவுக் காவலனாய்...
அண்ட சராசரங்கள்
ஆழிக்குள் மூழ்காதிருக்க...

–

ஞா.முனிராஜ்,
அருப்புக்கோட்டை.

# மாற்றி யோசிப்போம்

எங்கே செல்கிறது எமது வாழ்க்கை ?

எதனை நோக்கியவாறு எமது
பயணம்?

மனிதன் பிறப்பும் இறப்பும் எதற்காக?
அதில் வாழ்க்கை என்பது எதற்காக?

வாழ்க்கை என்னவென்று
காலம் சொல்லும்

வாழ்ந்தது என்னவென்று
உலகம் சொல்லும்

மனிதன் வாழ்வதோ
குறைந்த காலம்

வாழ்க்கையை மறுப்பது என்ன
நியாயம்?

உலகில் வாழ்க்கை என்பது
வாழ்வதற்கு
எமது வாழ்வால் உலகம் சிறப்பதற்கு
வாழ்க்கை என்பது ஒரு முறையே
வாழட்டும் என்றும் தலைமுறையே..

அழகாய் பூக்கள் பூத்தாலும் - என்றும்
அதன் வாழ்க்கை என்பது
சிறப்பாகும்...

நாளும் - விடியல் என்பது
புதிதாகும்...
பிறக்கும் நொடிகள் யாவும்
புதிராகும்...

வீசும் காற்று என்றும் புதிதாகும்..
பேசும் பேச்சு என்றும் புதிதாகும்..

நேற்று என்பது கடந்தாலும் - இங்கு
உலகில் இன்று என்பது நிலையாகும்
.
நினைவில் - நாளை என்பது
புதிதாகும்.
வாழ்வில் இலக்கு என்பது
முடிவானால்
அழகாய் - வாழ்க்கை என்பது
புதிதாகும்...

எமது வாழ்க்கை சிறப்பாய்
இல்லையென்றால்
வாழ்வில் ஏதோ ஒன்று குறையாகும்
- அதற்கு
மனதில் மாற்றம் ஒன்றே
மருந்தாகும்...

வாழ்க்கை சிறக்க
வேண்டுமென்றால் - உடனே

மனதில் மாற்றம்
ஒன்றே வழியாகும் ...

--
வாழ்வியல் கவி,
சா. நாகூர் பிச்சை,
(திண்டுக்கல் )



## மேன்சன் அறை

கலைந்துக் கிடக்கும் ஆடைகள்
நடுவே
சீட்டுக்கட்டு.

காற்றில் அசைந்தாடும்
சிகரெட் புகையை
தாண்டிச்செல்லும் ஒளி
தொலைக்காட்சி நிகழ்ச்சியில்
ஆன்மீக சொற்பொழிவு.

டவல்துண்டு கொடியில் அசைந்தாடி
அறைமுழுக்க
பரப்பிவிடுகிறது மின்விசிறி
சாம்பு வாசம்.

## குறுங்கவிதைகள்

நீர்த்தேக்கத்தில் கொக்கு
ஒரு கால் தூக்கி
வானில் வட்டமிடுகிறது.

கடல் அடைந்த பின்னும்
துள்ளும் மீன் வாலில்
நதியின் ஓட்டம்.

தோளில் சுமை
கைத்தட்டல் வாங்குகிறார்
பொம்மையிடம் சவ்மிட்டாய்காரன்.

இதயத்தில் துளைக்கு
அறுவை சிகிச்சை வேண்டாம்
அவள் வந்து செல்லும் பாதை.

தர்கா
எல்லா வித மக்களுக்கும்
அதே மயிலிறகு வருடல் தான்.

குத்திகுத்தி துலாவிய
குச்சியை பிடித்து வெளியேறும்
உண்டியல் நோட்டில் காந்தி.

தட்டில் விழவிழ
குரைக்கிறது யாசகனின் நாய்க்குட்டி
மழை ஒழுகும் நிழற்குடை.

அகல் விற்கும் பெண்
அருகில் செல்ல விடவில்லை
தேங்கியநீரில் நிலா.

மழைத் தூரல்
சன்னலில் மகள் கையில் பிடித்து
விளையாடுகிறாள்
தட்டாம்பூச்சி.

சன்னல் இருக்கை
கையசைக்கிறது ரோட்டோரம்
விற்கும் பொம்மைகளுள் ஒன்று.

தலைநிமிர்ந்து பார்க்கிறேன்
கோபுர உச்சியை காட்டுகிறது
பட்டாம்பூச்சி.

விளையாடும் சிறார்களின்
வியர்வையில் குளிக்கிறது
ஆற்றுமணல்.

மலை உச்சியில் நிற்கிறேன்
ஊர் எல்லையை வட்டமிட்டு
காட்டுகிறது புகைவண்டி.

துடைக்க துடைக்க
மூக்குக் கண்ணாடியை

புதிதாக்குகிறது
மழைத் தூரல்.

கோவில் பிரகாரம்
சுற்றிவரும் அவள் கால்களில்
அப்பாடா மெட்டி இல்லை

--
சாயிராம்,
*9443394625*

---

## ஏழை தேச உணவு...

பசியாற பன்..
இளைப்பாற டீ...
பருகியே பசியாற்றும்...
ஏழை தேசத்து...
தேனாமிர்தம்...
டீயும் பன்னும்...

## நீயும் நானும்...

நீ பாதி
நான் பாதி...
நாட்கள் பல
கடந்த பின்னும்...
இனித்தது தொண்டைக்குழியில்
உன் எச்சில்
பட்ட காபி...

## வீதியில் குடும்பம்...

கொஞ்சம் கொஞ்சமா
சேர்த்து வச்ச
காசு பணமெல்லாம்
கொஞ்ச நாளா
பத்திரமா இருக்குதய்யா...
குடிக்கலைனா கைகால்
நடுங்கும்னு குடிச்சிப்புட்டு
தட்டுத்தடுமாறி
வீடு வந்த
சேந்த வீட்டுக்காரு
தெம்பா தெடமா
வீட்டுலயே இருக்காருய்யா...
அப்பாவ மதுக்கடைலேர்ந்து
தள்ளாடி வந்ததை
பாத்தேன்னு கண்ணீரிட்ட
எம்புள்ளையோ மகிழ்ச்சியோட
தகப்பனோட
தாயம் விளையாடுதய்யா...
அழுதும்
அடிவாங்கியும்
ஓட்டிய குடும்பமிப்போ
கும்மாளமாய்
ஆனந்த கூத்தாடுரோமய்யா...
இன்பமாயிருந்த எங்களை
ஈட்டி வச்சி
எறிஞ்சா போல..
மதுக்கடைய தொறக்குறேனு
முக்கிய செய்தியா ஓடுதய்யா...
யார் குடும்பம்
எப்படியோ வீதியிலே போகட்டும்னு
வயித்திலடிச்சு சம்பாரிக்க
செய்தியா போட்டுட்டியே...

–
இலக்கியா இளவரசன்.

# திரும்புதல் சாத்தியமற்ற பாதை (நூல் விமர்சனம்)

நேரப் பற்றாக்குறையால் புத்தகங்களின் வாசிப்புகள் சமீப காலத்தில் குறைந்து போயிருந்தன. பல நாட்களுக்குப் பின் வாசிக்க வாய்ப்பு கிடைத்து, முழுமையாக கடந்து வந்தேன் திரும்புதல் சாத்தியமற்ற பாதையின் பக்கங்களை..!

கவிஞர் பூபாலன் அவர்களின் திரும்புதல் சாத்தியமற்ற பாதை நூலின் தலைப்பிலேயே கடந்து வந்த பாதைகளின் குறிப்புப் பெட்டகங்களென எண்ணினேன்.

திரும்புதல் சாத்தியமற்ற பாதை - தின்று செரித்த காலத்தின் எச்சங்கள் என்பதை அழுத்தமாக நூலின் தலைப்பே உரக்க பதிவிட்டு விடுகிறது.

ஒவ்வொரு மனிதனுக்கும் தன் கடந்தகாலத்தை கடக்க இயலாத வழிகளும் சரி, நினைவுகளும் சரி, ஒன்றன்பின் ஒன்றாக அலங்கரித்துக்கொண்டும், ஆத்மார்த்தமாக்கிக் கொண்டும், அழவைத்துக்கொண்டும் மிதமாக நகர்த்தி கொண்டு சென்று ஒட்டுமொத்த நினைவுகளை ஓரிடத்தில் நிறுத்துகிறது.

திரும்புதல் சாத்தியமற்ற பாதையில் நான் விரும்பிய சில வரிகளை விவரிக்க எண்ணுகிறேன்.

"நாளை அவசியம் சந்திப்போம் என சொல்லி சென்றவன் இன்றிரவு தூக்கு மாட்டிக் கொண்டான். எனக்கு நாளையை நினைத்து பயமாக இருக்கிறது"

இவ்வரிகள் நிரந்தரமற்ற மனித வாழ்க்கையை பிரதிபலிக்கிறது. இன்று பார்ப்பவர் நாளை இருப்பாரா இல்லையா என்ற நிரந்தரமற்ற நிலையை பிரதிபலித்திருக்கிறது இவ்வரிகள்.

"மொட்டை மாடி நெகிழிப் புட்டியில் வாழ்க்கையை நிறைத்துக்கொள்ளும் அதை செடி என்றோ மரம் என்றோ உயிர் என்றோ சொல்ல நடுங்குகிறது." இவ்வரிகளை கண்டதும் தொட்டி செடி என்ற ஒரு கவிதை ஞாபகம் வந்தது. ஒரு தொட்டி செடி தான் வாழும் ஒரு நிலையை, ஒரு சூழலை விவரிப்பதை போல ஒரு கவிதை கல்லூரியில் படித்தது நினைவுக்கு வந்தது.

அக்கவிதையில் தொட்டிச் செடி என்ற ஒரு தலைப்பு இருந்தது. இதில் தலைப்பு இல்லாவிடினும் படித்ததும் சிந்தைக்கு எட்டியது என்னவோ தொட்டி செடியின் துயர் மட்டும்தான்.

இன்றைய காலகட்டத்தில் இழந்து இருப்பவைகளே அதிகம். கடந்து வந்தவைகளில், கற்றுக் கொண்டதே அதிகம். நம் பயணங்களில் நாம் சந்தித்தது பல்வேறு விதமான இழப்புகளும் வெற்றிகளும் என எதுவாக வேண்டுமானாலும் நிரம்பி இருக்கலாம். எதுவாக இருந்தாலும் அதே இடத்திற்குத் திரும்புதல் என்பது சாத்தியமற்ற பாதைதான்.

"காணாமல் போனவர்கள் பற்றிய அறிவிப்பை கண்ணீர் மல்க பார்த்ததுண்டா? பிணவறைகளுக்கு அடையாளம் காட்டப் போனதுண்டா? செய்தித்தாள்களில் விபத்துகளைத் தேடிப் பார்த்துப் படபடத்ததுண்டா?"

"காணாமல் போனவர்கள் இல்லாமல் போனவர்களை விடவும் அதிகம் தொந்தரவு செய்பவர்கள், அதிகம் அழ வைப்பவர்கள், நம்மை தண்டிக்க இல்லாமல் போவதை விடவும் காணாமல் போவது சிறந்த வழி என்று தெரிந்தவர்கள்."

இவ்வரிகள் முழுக்க வலி தோய்ந்த உணர்வுகளை ஆழமாக பதிவிட்டுள்ளார். காணாமல் போனவர்களை உணர்வுப் பூர்வமாக பதிவிட்டிருப்பதில் இழப்பின் வேதனைகள் இமைமுன் ஊசலாடுகிறது..!

இங்கு ஒவ்வொரு கவிதையிலும் ஒரு நிகழ்வு எதார்த்தமாய் பதிவிடப்பட்டிருக்கிறது. கவிதை வரிகளுடன் நிகழ்வுகளும் கற்பனைக்குள் வந்து அதே இடத்தில் என்னையும் கொண்டுசென்று நிறுத்தியது சிலகணங்கள். எல்லா எழுத்துக்களும் உயிர்ப்பாக நம்மை அந்த சூழ்நிலைக்கு இழுத்துக் கொண்டு செல்வதில்லை..

சில வரிகள் மட்டுமே அதை திறம்பட செய்கிறது. அந்த வகையில் திரும்புதல் சாத்தியமற்ற பாதை என்னையும் அந்தந்த வரிகளின் நிகழ்வுகளுக்குள் இழுத்துச்சென்று சில நிமிடங்களாவது பிரவேசிக்க வைத்தது.

- எந்த ஒரு கடந்த காலமும் ஒருவரின் தனிமையில் அதிகம் தேடப்படும் பொக்கிசங்கள் ஆகும். ஏதோ ஒன்றின் ஆழ்ந்த விருப்பங்களும் நினைவுகளும் ஒருவரின் தனிமையில் மிக அதிகமாக நினைவுக்கு வரும் அல்லது அக் கடந்த காலத்திற்கே கூட்டிச் செல்லும்.

காலத்தின் ஊமை மொழிகளில் கரைந்து போனவைகளாய் நினைவாக மட்டும் இன்றுவரை ஒட்டிக்கொள்கிறது கடந்த காலங்கள்.

காலம் எங்காவது ஒரு இடத்தில் ஏதோ ஒரு நிலையில் நிறுத்தி விடுகிறது நம்மை... அவ்வாறு நிறுத்திய தருணங்கள் ஒவ்வொன்றையும் எழுத்துக்கள் மூலம் சிறப்பாக விதைத்துள்ளார் இரா பூபாலன். வாழ்த்துக்கள் !

- கவிமலர் த.சரண்யா (பாலக்காடு, கேரளா).

## வாழ்க்கை வட்டத்திற்குள்...

கடவுளின் மடியில்
ஒரு குழந்தையைக் காண்கிறேன்.

நிச்சயமாக
அது நானில்லை.
கடவுளின் குழந்தையாகத்தான்
இருக்க வேண்டும்.

கடவுளையும்
குழந்தையையும்
உற்றுநோக்குகிறேன்.

கடவுளின் ஜாடை
ஒத்திருக்கிறது குழந்தையிடம்.
எந்த பின்னமுமின்றி
மிகவும் அழகாய் இருக்கிறது.

குழந்தையை மார்போடு
நெருக்கமாய்ச்
சேர்த்தணைத்திருக்கிறார்
கடவுள்.

சித்தம் தெளிய
உரையாடுகிறது.
பசியென்றுரைக்கிறது
வேண்டியதைக் கேட்கிறது குழந்தை.

அதன் சந்தேகங்களை
முன் வைக்கிறது
சுறுசுறுப்புடன் இயங்குகிறது.

உனக்குத் தெரியாதது
ஒன்றுமில்லை.

என்னை ஏன்...? எதற்கு...?
இப்படிப் படைத்தாய் என்கிறேன்.
மௌனித்திருக்கிறார்
கடவுள்.

குழந்தையிடம்
நீயும் நானும் இடம் மாறலாமென்று
கோருகிறேன்
ஒப்ப மறுக்கிறது குழந்தை.

அவன் பிள்ளையால்
ஊனமாய் வாழமுடியாதென்றே
பாவிகடவுள்
என்னை ஊனமாய்ப்
படைத்திருக்கிறான்.

அவனைப் போலல்ல
எம்மக்கள் மேன்மக்கள்
என்னுடம்பில் தானே ஊனம்.

அவனுக்கு
நான் யாரெனக் காட்டிட...
என் மனதில் ஊனமின்றி
வாழ்க்கை வட்டத்திற்குள்
மகிழ்வாய் நுழைகிறேன் நான்.
/

## விழித்துக் கொண்டிருந்தேன்

இனிய மாலைப்பொழுது
வெட்டவெளியில்
தன்னந்தனியாய் அமர்ந்தபடி
இரவொன்றைச்
செய்து கொண்டிருக்கிறேன்.

பலர் ஆச்சரியமாகவும்

சிலர் அலட்சியமாகவும்
கடந்து கொண்டிருக்கிறார்கள்
என்னை.

என்னிடம் ஆர்வம் மிகுதிபட
வினவுபவர்களுக்கு
நான் செய்து கொண்டிருக்கும்
இரவு குறித்து
விவரித்து விளக்கமளிக்கிறேன்.

அந்திசூரியன் அடிவானில்
நுழைந்ததின் பொருட்டு
நான் செய்து முடித்த இரவு
வானமெங்கும் கவ்வத்தொடங்குகிறது.

நீங்கள் எல்லோரும்
இருட்டில் இருக்கின்றீர்களென்ற
அச்சத்தில்
அழகாய் நிலவொன்றைச்
செய்து முடிக்கிறேன்.

நிலவதன் ஒளிவெள்ளத்தை
உமிழத்தொடங்குகிறது.
அதுவரையில்
மௌனித்திருந்த நீங்கள்
சிரிக்கத் தொடங்குகிறீர்கள்.

உங்கள்
ஒவ்வொருவரின்
ஒரு சிரிப்புக்குமாய்
வானில் ஒரு நட்சத்திரம்
மின்னத் தொடங்குகிறது.

என்னிரவையும் பால்நிலவையும்
ரசித்து முடித்த
சில கணங்களுக்குள்
நீங்கள் எல்லோருமாய்
உறக்கத்தின் மடியில்
தவழ்ந்து கொள்கிறீர்கள்.

நான் செய்து முடித்த
இரவிற்காகவும்
வானில் தனித்திருக்கும்
ஒற்றை நிலவிற்காகவும்
உங்கள் சிரிப்பினில் பூத்த
நட்சத்திரங்களுக்காகவும்
நான் மட்டும் விடியவிடிய
விழித்துக் கொண்டிருந்தேனென்பது
நீங்கள் ஒருவரும்
அறியப்படாத ஒன்று.

- கவிதைகள் ஆக்கம்
**பாரியன்பன் நாகராஜன்,**
82/32-B, பிள்ளையார் கோவில் தெரு,
காமாட்சி அம்மன் பேட்டை,
குடியாத்தம் - 632602,
கைப்பேசி: 9443139353



**பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்
பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.**

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
டணாணாணீ://ட்ச்டிணணாடச்ணூடுச்டூ.ட்ச்ணணச்டி.டிண

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில்).

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு.

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்.

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது.

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு.

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்.

சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்

பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்.

நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி.

குழாய் பதிக்கும் பணி.

விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு.

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு.

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

மன்னையின் மைந்தர்கள்

மண்ணின் மாற்றத்தை நோக்கி

+91 8220567322

http://maintharkal.mannai.in

MannaiyinMaintharkal

ThiravukolMagazine